
16 - 28 பிப்ரவரி 1997 ❑ ரூ. 3.50
www.padippakam.com

**மூப்பனார் – சிதம்பரம்: பரிசுத்தவான்களா?**

# புதிய ஜனநாயகம்




## சாதனை சரி! வேதனை தீர என்ன வழி?

படிப்பகம்

www.padippakam.com

# அடிபணிந்தது அருணா சர்க்கரை ஆலை நிர்வாகம்

தென்னாற்காடு மாவட்டத்தில் அமைந்துள்ள அருணா சர்க்கரை ஆலை, தனது தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவை, விருத்தாசலம் நகருக்கு அருகேயுள்ள ஏ. சித்தூர் எனும் கிராமத்திற்கு கொண்டு சென்று சேமித்து வருகிறது. இக்கழிவால் சுற்றியுள்ள கிராமங்களின் நிலமும் நீரும் மாசுபட, அப்பகுதியைச் சேர்ந்த ஏழு கிராம மக்கள் ஒன்றிணைந்து, ஏ. சித்தூர் கிராமத்தில் அமைந்துள்ள கழிவு ஆலையை அகற்றக் கோரி 23.12.96 அன்று சாலை மறியலில் ஈடுபட்டனர். புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி தலைமை தாங்கி நடத்திய இப்போராட்டத்தின் வீச்சினால், 6.1.97 அன்று கோட்டாட்சியர் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்துவதென முடிவானது.

ஏ. சித்தூர் கிராமப் பஞ்சாயத்து கட்டிடத்தில் மாலை வரை நடந்த இப்பேச்சு வார்த்தையில் முடிவு ஏதும் காண முடியவில்லை. அதிகார வர்க்கம், ஆலை நிர்வாகத்திற்கு ஜால்ரா தட்டியதுதான் பேச்சுவார்த்தையின் தோல்விக்குக் காரணம். பேச்சுவார்த்தையில் இருந்து வெளியேறிய போராட்டக் குழுவினர், பொதுமக்களின் ஒத்துழைப்போடு தொடர் சாலை மறியல் போராட்டத்தைத் தொடங்கினர்.

சாலை மறியல் நடந்து கொண்டிருந்தபொழுதே அரசு அதிகாரிகளும், ஆலை நிர்வாகிகளும் வெளியேற முயன்றனர். ஆனால் போராட்டக் குழுவோ, ''அரசு அதிகாரிகளை வெளியேற அனுமதிப்பது; ஆலை நிர்வாகிகளைச் சிறைபிடிப்பது'' எனப் புதிய தந்திரத்தை வகுத்துக் கொண்டு, அதனைப் பொதுமக்களின் ஒத்துழைப்போடு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. இத்திடீர்த் திருப்பத்தால் நிலைகுலைந்துபோன கோட்டாட்சியரும், காவல்துறை கண்காணிப்பாளரும் கீழ்மட்ட ஊழியர்களோடு கிராமத்திலேயே தங்கிவிட்டனர்.

ஆனாலும் கூடுதலாக போலீசாரை வரவழைத்து, தடியடி நடத்தி போராட்டத்தைப் பிசுபிசுக்கச் செய்துவிட முயன்றது, அதிகார வர்க்கம். அவர்களின் இந்த நரித்தனத்தைப் புரிந்து கொண்ட போராட்டக் குழுவினர், ''பின் வாங்கித் தாக்குதல் தொடுப்பது'' என்ற புதிய செயல் தந்திரத்தை வகுத்தனர். இதன்படி, ''ஆலை நிர்வாகிகளை விடுவிப்பது; அதேபொழுதில் அவர்கள் அனாதையாக விட்டுச் செல்லும் கழிவு ஆலையைக் கைப்பற்றித் தாக்கி அழிப்பது'' என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கினர். இப்புதிய உத்தி அதிகார வர்க்கத்தை முற்றிலுமாகச் செயலிழக்கச் செய்தது.

இதனிடையே ஐம்பதிற்கும் மேற்பட்ட பேருந்துகள் சிறைப் பிடிக்கப்பட்டன. பயணிகளை, திருச்சி - சென்னை நெடுஞ்சாலைக்கு அழைத்துச் சென்று, அவர்களின் பயணம் இடையூறின்றித் தொடர கிராம மக்கள் உதவி புரிந்தனர். கிராமத்திலேயே தங்க நேர்ந்துவிட்ட எஞ்சிய பயணிகளுக்கு உணவும், குழந்தைகளுக்குப் பாலும் வழங்கப்பட்டது. இதன் மூலம், பயணிகளை கிராம மக்களுக்கு எதிராகத் திருப்பிவிட முயன்ற அதிகாரிகளின் வஞ்சகத் திட்டம் முளையிலேயே கிள்ளியெறியப்பட்ட பொறியில் சிக்கிக் கொண்ட எலியைப் போல, அவர்கள் செய்வதறியாது தவிதவித்துப் போயினர்.

போராட்டத்தை இழுத்துக் கொண்டே செல்வது மக்களின் உணர்வைக் குன்றச் செய்துவிடும் என உணர்ந்திருந்த போராட்டக் குழு, ''அதிகாலை ஐந்து மணிக்குள் ஆலையை இழுத்து மூடாவிட்டால், அதை தீ வைத்து எரித்து விடுவது'' என முடிவெடுத்து அறிவித்தது. தூக்க கலக்கத்தில் இச்செய்தியைக் கேட்ட அதிகார வர்க்கம், ''போராட்டத்தின் வெற்றியை இனி தங்களால் தடுத்துவிட முடியாது'' என உணர்ந்து கொண்டனர். ஆலை நிர்வாகிகளும் அதிகாரிகளும், ''ஆலையை இழுத்து மூடி விடுவதாக'' அறிவித்ததோடு, அம்முடிவை எழுதியும் கொடுத்தனர். கிராம மக்களிடம் எழுதிக் கொடுத்தபடி இவ்வாலை தற்பொழுது மூடப்பட்டு விட்டது.

போராட்டம் அறிவிக்கப்பட்ட பின், ''பு.மா.இ.மு. தோழர்களை விலைக்கு வாங்கி விடலாம்'' என இறுமாந்து இருந்தது ஆலை நிர்வாகம். பத்து லட்ச ரூபாயை எடுத்துக் காட்டி, ஆசை வார்த்தை காட்டியது. ஆனால் பு.மா.இ.மு. தோழர்கள் தங்களின் புரட்சிகர நேர்மையில் இருந்து எள் முனையளவும் பிசகி விடவில்லை. போராட்டத்தின் பொழுதோ, ''மக்கள் மத்தியில் இருந்து பு.மா.இ.மு. தோழர்களை அப்புறப்படுத்திவிட்டால், போராட்டத்தைப் பிசுபிசுக்கச் செய்துவிடலாம்'' என எதிரிகள் மனப்பால் குடித்தனர். போராட்டம் நெடுகிலும் மக்களின் முன்முயற்சியைக் கட்டவிழ்த்துவிட்டு, இச்சதியை முறியடித்தது. பு.மா.இ.மு. எதிரி பலம்வாய்ந்தவனாக இருந்தபோதும், போராட்டத்தின் போக்கினைச் சரியாக மதிப்பிட்டு, போராட்டத்தில் ஏற்படும் திருப்பங்களுக்கு ஏற்ப முடிவுகளை எடுத்து, அம்முடிவுகளைப் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் பிசகாது நடைமுறைப்படுத்தியதுதான் இவ்வெற்றியைச் சாதித்துத் தந்துள்ளது.

தகவல்: பு.மா.இ.மு., விருத்தாசலம்.

## தூங்குவது பிரதமர் மட்டுமல்ல; அதிகாரிகளும் தான்!

மதுரை எம்.கே. புரத்தைச் சேர்ந்தவர் கோபால். 75 வயது முதியவரான இவர், முதியோர் உதவித் தொகை கோரி கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து பல மனுக்களை அரசிற்கு அனுப்பி வந்துள்ளார். தபால் அனுப்பச் செலவானதுதான் இம்முதியவர் கண்ட பலன்.

சென்ற ஆண்டில் உதவித் தொகை பெற தனக்கு உதவுமாறு கோரி, பு.மா.இ.மு. தோழர்களை அணுகினார் இவர். பு.மா.இ.மு.வினர் உதவித் தொகை மனுவுடன் பிரதமருக்கும் மனுவொன்றை முதியவர் பெயரில் அனுப்ப உதவினர். பிரதமருக்கு அனுப்பிய மனுவில், ''நான் உதவிபெறத் தகுதி இல்லாதவன் எனில், எனக்கு 10, 20 தூக்க மாத்திரையை அனுப்பி வையுங்கள்'' எனத் தனது இழிந்த நிலையைக் குறிப்பிட்டிருந்தார், இம்முதியவர்.

பிரதமர் அலுவலகத்தில் இருந்து இம்முதியவருக்கு பார்சல் ஒன்று வந்தது. அப்பார்சலை ஆவலோடு பிரித்த முதியவர் அதிர்ச்சியில் உறைந்து போனார். பிரதமரிடம் உதவி கேட்டு தமிழகத்தில் இருந்து சென்ற மனுக்களை, முதியவருக்கு அனுப்பி வைத்துள்ளது அதிகார வர்க்கம். மெத்த படித்த மேதாவிகளின் இந்த அலட்சியப் போக்கை பத்திரிகைகளில் அம்பலப்படுத்தினர் பு.மா.இ.மு. தோழர்கள்.

பிரச்சினை சந்தி சிரித்த பின் ஓடிவந்த மதுரை மாவட்ட ஆட்சியாளர், ''தலைமைச் செயலகத்துக்குச் செல்ல வேண்டியதைத் தவறுதலாக அனுப்பி விட்டதாக''ச் சமாதானம் கூறினார். பின்னர் முதியவர் கோபாலின் மனுவைப் பரிசீலித்து, உதவித் தொகை வழங்கிட உத்தரவிட்டு, காற்றில் பறந்த மானத்தைக் காத்துக் கொண்டது அதிகார வர்க்கம்.

தகவல்: பு.மா.இ.மு., மதுரை.

## ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்துப் பொதுக்கூட்டம்!

தூத்துக்குடி நகருக்கு பேரபாயமாக எழுந்து நிற்கும் ''ஸ்டெர்லைட்'' தாமிர உருக்காலையை எதிர்த்து தூத்துக்குடி நகர மக்களும், மீனவர்களும் போர்க்குணமிக்க வகையில் போராடி வருகின்றனர்.

இப்போராட்டத்தை ஆதரித்தும், உயிரினங்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் கேடு விளைவிக்கும் தொழிற்சாலைகளையும், இரசாயனக் கழிவுகளையும், ஏகாதிபத்திய வல்லரசுகள் ஏழைநாடுகளின் தலையில் கட்டி வரும் சதியின் ஒரு பகுதி தான் ''ஸ்டெர்லைட்'' ஆலை என்பதை விளக்கியும், மக்கள் கலை இலக்கியக் கழகம் (ம.க.இ.க.) தூத்துக்குடி நகரில் 14.12.96 அன்று குருஸ் பர்னாந்து சிலை முன்பாக பொதுக்கூட்டமொன்றை நடத்தினர். இப்பொதுக்கூட்டத்தில் தோழர். ஜெயகாந்த் சிங் சிறப்புரையாற்றினார். கூட்ட முடிவில் ம.க.இ.க. மைய கலைக் குழுவினரின் ''அடிமைச் சாசனம்'' எனும் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடந்தது.



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 12

**இதழ்: 4 - 6**

16 ஜன. '97 - 28 பிப். '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 8015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# மத நல்லிணக்கம் பேசாதே! மதத்தையும் அரசியலையும் பிரி!

அனைத்திந்திய ஜிகாத் கமிட்டியின் தலைவர் பழனிபாபா என்றழைக்கப்பட்ட அகமது அலியின் படுகொலையைத் தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்பட்ட மதவெறிப் படுகொலைகள் பதினைந்து நாட்களாகத் தமிழ்நாட்டையே குலுக்கி விட்டன. தமிழ்நாட்டுச் சமூக அமைப்பின் பலவீனத்தையும், அரசியல் தலைமையின் கையாலாகாத்தனத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டன. தெற்கே மண்டைக்காடு, மீனாட்சிபுரம் கிராமங்களில் துவங்கிய மதவெறிப் படுகொலைகள், சாதிய வடிவமும் பெற்று, சுமார் 20 ஆண்டுகளில் தமிழ்நாடு முழுவதும் பற்றிப் படர்ந்து விட்டன. இந்த வகையில் தமிழ்நாட்டைத் தேசிய நீரோட்டத்தில் கலக்கச் செய்வதில் சாதி, மத வெறித் தலைமையும், அரசியல் தலைமையும் வெற்றி பெற்று விட்டன.

ஆர்.எஸ்.எஸ்., பாரதீய ஜனதா ஆகிய இந்து மத வெறி பாசிசம் தென்னாட்டில் வலுவான சக்தியாக வளர்வதற்காகவே, இந்து முன்னணி, விசுவ இந்து பரிசத் போன்றவைத் திட்டமிட்டு நிறுவப்பட்டன. ஆரம்பத்தில் பார்ப்பன - சௌராஷ்டிர சாதியினர் மத்தியில் மட்டுமே ஆதரவு பெற்றிருந்த இந்த இயக்கம், பெரும் வியாபாரிகளான நாடார்கள், நிலவுடமை தேவர்கள் மத்தியிலும் பரவத் தொடங்கியது. இசுலாமிய வியாபாரிகளுக்கு எதிரான போட்டியிலும், தாழ்த்தப்பட்ட மக்களையும், கிறிஸ்தவ மீனவர்களையும் ஒடுக்குவதிலும் அவர்களுக்கு இந்த இயக்கம் தலைமை கொடுத்தது. இந்த அடிப்படையில்தான் மண்டைக்காடு கிறிஸ்தவ மீனவர் - நாடார் மோதல், மீனாட்சிபுரம் மதமாற்றங்களுக்கான தோற்றுவாய்க் காரணங்களும், தொடர்ந்து வந்த சாதி, மதப் படுகொலைகளும் அமைந்தன. இதைத் தொடர்ந்து பழனிபாபா தலைமையிலான அனைத்திந்திய ஜிகாத் கமிட்டியும், கோவை சையது அகமது பாட்சா தலைமையிலான "அல்உம்மா" என்ற இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பும் தோன்றி வளர்ந்தன. இவையும் சரி, இந்து முன்னணி, விசுவ இந்து பரிசத்து முதலிய இந்து மதவெறி அமைப்புகளும் சரி, முறையே இசுலாமிய, இந்து அடிப்படைவாத இயக்கங்கள் கூட அல்ல; வெறும் பிழைப்புவாதம் கலந்த மதவெறித் தீவிரவாத இயக்கங்கள்தாம்.

வடக்கே பாரதீய ஜனதா சில மாநிலங்களில் ஆட்சியைப் பிடித்ததும், அயோத்தி பாபரி மசூதி இடிப்புக்குப் பிறகு நாடாளுமன்றத்தில் அதன் பலம் பன்மடங்கு பெருகி மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்புப் பிரகாசமானதும், தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களில் நிலவுடமை வேளாளக் கவுண்டர்களும், நிலவுடமை-முதலாளிகளான நாயுடுக்களும் இந்து மதவெறி அமைப்புகளுக்கு ஆதரவளிக்கத் துவங்கினர். இதனால் தெம்படைந்த அந்த இயக்கம் தாழ்த்தப்பட்ட மக்களையும், இசுலாமியரையும் சீண்டி விடும் வகையில் வலிந்து சில நடவடிக்கைகளில் இறங்கியது. பெரும்பான்மை மக்களின் சார்பாகச் செயல்படுவதாகக் காட்டிக் கொள்வதால் தனிநபர் படுகொலைகளோடு, விநாயகர் ஊர்வலம், யாத்திரைகள், வழிபாடுகள், மாநாடுகள் என்று கும்பல் நடவடிக்கைகளில் இந்து வெறி அமைப்புகள் ஈடுபடுகின்றன. இவை சாத்தியமில்லாததால், சிறுபான்மை மதத்தினருக்குப் பாதுகாப்பு என்கிற பெயரில் ஜிகாத்தும், அல் உம்மாவும் தனிநபர் கொலைகள், குண்டு வெடிப்புகளில் இறங்கின. இந்த இருபிரிவினருமே தமிழ்நாட்டில் மட்டும் தனித்து இயங்கவில்லை. ஜனவரி 10-ந் தேதி திண்டுக்கல்லில் பாரதீய ஜனதா கட்சி மாநிலச் செயற்குழு உறுப்பினர் மாணிக்கமும், மாவட்டத் துணைத் தலைவர் செல்வராகம், ஜனவரி 28-ல் பழனிபாபா பொள்ளாச்சியிலும் கொல்லப்பட்ட சம்பவங்களில் இருந்து வெளிமாநிலக் கொலைகாரர்கள் அமர்த்தப்படுவதைக் காண்கிறோம்.

கடந்த மூன்றாண்டுகளில் 29 இந்துக்களும், 33 இசுலாமியர்களும் இப்படிப்பட்ட மதவெறிக்குப் பலியாகி உள்ளனர். பழனிபாபா கொலையைத் தொடர்ந்து நடந்த மதவெறிக் கலவரத்தால் கோவை, திருப்பூர், கீழக்கரை ஆகிய பகுதிகள் கலவரத் தாக்குதல்கள், படுகொலைகள் எனப் பீதியில் மூழ்கடிக்கப்பட்டன. பொள்ளாச்சி, பழனி, ராமநாதபுரம், மதுரை, நாகர்கோவில், புதுக்கோட்டை, சென்னையில் தாம்பரம் பகுதிகள் மதக்கலவர பீதியின் பிடியில் சிக்கின. கொல்லப்பட்டவர்களில் ஓரிருவர்தான் மதவெறி அமைப்பினர். தொப்பி வைத்திருந்த, திருநீறு குங்குமம் வைத்திருந்த "குற்றத்துக்காக"க் கொல்லப்பட்டவர்கள் தாம் அதிகம். பழனிபாபா கொலைக்குப் பின்விளைவுகள் ஏற்படும் என்று அராது, தாமதமாக விழித்துக் கொண்ட கருணாநிதி அரசு, கலவரம் முற்றிய பிறகு தலையிட்டு ஒருவாறு சமாளித்தது.

முக்கால் நூற்றாண்டுக்கு மேலாக பெரியார், அம்பேத்கர், மார்க்சிய இயக்கங்கள் பலவற்றைக் கண்டுள்ள தமிழ்நாடு, மண்டைக்காடு, மீனாட்சிபுரம் சம்பவங்களுக்கு முன்புவரை மதக்கலவரங்களையே காணாத தமிழ்நாடு, இன்று மதவெறியின்பிடியில் சிக்கியுள்ளது. இது, திராவிட, போலிக் கம்யூனிச, அம்பேத்காரிய இயக்கங்களின் சீரழிவுப் போக்கோடு நேரடியாக இணைந்ததுதான். இந்த இயக்கங்கள் மதச் சார்பின்மைக் கொள்கைக்காகப் போராடுவதை விடுத்து சந்தர்ப்பவாத, பிழைப்புவாதத்துக்குள் மூழ்கிவிட்டன. குறிப்பாக திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியாக எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயா ஆட்சிக்கு வந்தது இந்து மதவெறியின் வளர்ச்சிக்குச் சாதகமாக அமைந்தது. பகுத்தறிவுவாதிகள் எனச் சொல்லிக் கொள்ளும் திராவிடக் கட்சியினர் உட்பட ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் எல்லாம் குல்லாய் போட்டுக் கொண்டு தொழுகைக்குப் போய் இசுலாமியர் ஆதரவு கோருவதும் நடக்கிறது. போலிக் கம்யூனிஸ்டுகளோ மதவெறி சக்திகளை, குறிப்பாக இந்துமத வெறியை எதிர்த்துப் போராடாது, சமரச நிலையெடுத்து "மத நல்லிணக்கம்" பேசித் திரிகின்றனர். இச்சமரசங்களுக்கு இடந்தராது மதம் வேறு, அரசியல் வேறெனப் பிரித்து, மதவெறியைத் தகர்ப்பதுதான் மதவெறிப்படுகொலைகளுக்கு முடிவு கட்டும்.

www.padippakam.com

# தி.மு.க. அரசின் பலமுனை தோல்வி

**விலைவாசி உயர்வு, காவிரி, ஈழ அகதிகள் பிரச்சினைகளில் தனது அரசு அடைந்து வரும் தோல்விகளை, ஜெயா – சசி கும்பல் மீது எடுக்கும் நடவடிக்கைகளைக் காட்டி மறைத்து விட முயலுகிறார், கருணாநிதி.**

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி யாருக்கும் வியப்பானதல்ல; அனைவரும் எதிர்பார்த்ததுதான். ஆளுங்கட்சியாக இருந்து கொண்டு ஒரு இடைத்தேர்தலில் வெற்றிபெறுவது அவ்வளவு ஒன்றும் இயலாத காரியம் அல்ல; சாதகமானதுதான்.

தி.மு.க. - த.மா.கா. கூட்டணிக்கு எதிராகப் போட்டியிட்ட ஜெயா - சசி கும்பலின், அ.தி.மு.க.வின் இலஞ்ச - ஊழல்கள் ஆதாரப் பூர்வமாக அம்பலப்பட்டு, முற்றாகத் தனிமைப்பட்டுப் போய் விட்டன. இவ்விரு கட்சிகள் தவிரப் போட்டியிட்ட காங்கிரசு, 'மார்க்சிஸ்டு', ம.தி.மு.க., போட்டி அ.தி.மு.க. ஆகியன தி.மு.க. எதிர்ப்பு வாக்குகளைச் சிதறடிக்கவே பயன்பட்டன; எஞ்சியிருந்த பா.ம.க., எம்.ஜி.ஆர். கழகம் போன்றவை தி.மு.க.வையே ஆதரித்தன. தவிரவும், ஆளுங் கட்சிக்கே உரிய வசதி காரணமாக சில சில்லரைச் சீர்திருத்தங்கள் உட்பட அரசு எந்திரத்தை தனது வெற்றிக்குப் பயன்படுத்திக் கொண்டார், கருணாநிதி. இவையெல்லாம் தி.மு.க.-வுக்குச் சாதகமாக அமைந்து விட்டன.

ஆகவே, புதுக் கோட்டைத் தொகுதி இடைத் தேர்தலில் தி.மு.க.வுக்குக் கிடைத்துள்ள இந்த வெற்றி, மீண்டும் எதிர்மறையானதுதானே தவிர - ஜெயா சசி கும்பலின் மீதான வெறுப்பைக் காட்டுவதுதானே தவிர, கருணாநிதியும் அவரது கூட்டாளிகளும் உரிமை பாராட்டுவதைப் போல் தி.மு.க. அரசின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் கிடைத்த அங்கீகாரம் அல்ல; குறிப்பாக தி.மு.க. அரசின் ''சாதனை''களுக்கு கிடைத்த வெற்றி அல்ல.

- அ.தி.மு.க. ஆட்சியின் போது நடந்த இலஞ்ச - ஊழல் அதிகார முறைகேடுகளுக்குக் காரணமான குற்றவாளிகளைக் கண்டு பிடித்துத் தண்டிப்பது;
- நிலை குலைந்து போன நிர்வாகத்தைச் சீரமைத்து, தூய்மையான ஆட்சியை நிறுவுவது;

- இந்த வாக்குறுதிகளுடன் கருணாநிதி ஆட்சிக்கு வந்தார். ''ஜெயா - சசி கும்பலின் ஆதிக்க ஆட்சி தொலைந்தால் போதும்'' என்கிற உணர்வில், வலுவான ஒரே மாற்று அணி என்கிற காரணத்தால் தி.மு.க. - த.மா.கா. கூட்டணிக்கு மக்கள் வாக்களித்தனர்.

தி.மு.க.வுக்கு எதிரான வலுவான மாற்று இல்லாமலும், எதிராளிகள் பிளவுபட்டும் பலவீனமாக இருந்தாலும் போதும்; இதையும் தனது கவர்ச்சிகரமான பேச்சுத் திறனையும் வைத்து மக்கள் கவனத்தை வேறு ஏதாவது ஒன்றில் குவிக்கச் செய்தால் போதும் என்கிற சுயதிருப்தியில் கருணாநிதி மிதக்கிறார். ஆனால் மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தாக வேண்டும்; முக்கியமான பிரச்சினைகளைத் தீர்த்தாக வேண்டும். இல்லையானால் கருணாநிதி மட்டுமல்ல, வேறு எந்தக் கொம்பனானாலும் கவிழ்ந்து விடுவார்கள் என்பதுதான் வரலாறு.

### இலஞ்ச ஊழல் பேர்வழிகள் மீது நடவடிக்கை: அரைக் கிணறு தாண்டுகிறது, கருணாநிதி அரசு

ஜெயா - சசி கும்பலின் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. விசாரணைக் கமிசன் போட்டுக் காலத்தைக் கடத்தாது, நேரடிக் குற்ற விசாரணை, சோதனை, கைது, சொத்துக்கள் முடக்கம், அரசியல் ஆதாயம் கருதித்தான் என்றாலும் அந்த நடவடிக்கைகள் பற்றிய விளம்பரம் ஆகியவை சரியானவைதான்; அவசியமானவைதான். ஆனால் ஜெயா-சசி கும்பலின் முக்கிய எடுபிடிகளாக இருந்த முன்னாள் மந்திரிகள் கண்ணப்பன், முத்துசாமி, அரங்கநாயகம், சோமசுந்தரம், ஆர்.எம். வீரப்பன் போன்ற போட்டி அ.தி.மு.க. கும்பல் மீது கண் துடைப்பு நடவடிக்கைகளே எடுக்கப்படுகின்றன. அதே போல ஜெயா - சசி கும்பலின் கொள்ளைக்குக் காரணமான ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், கிரிமினல் குற்றங்களுக்குக் கைகூலிகளாக இருந்த தேவாரம், ராஜகோபால், கணேசன் போன்ற ஐ.பி.எஸ். அதிகாரிகள் மீதும் நடவடிக்கை இல்லை.

''முந்தைய ஆட்சியாளர்களுக்கு எதிரான சட்டபூர்வ -நடவடிக்கைள், வரும் ஆட்சியாளர்களுக்கு ஒருபாடமாக அமையும்'' என்றார், கருணாநிதி. ஒரு சில மந்திரிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ஓரிரு எம்.எல்.ஏக்கள், ஏதோ ஒரு ஐ.பி.எஸ். அதிகாரிக்கு எதிரான நடவடிக்கைள் வரம்புக்குட்பட்டவைதான்; நமக்கு ஒன்றும் வராது என்ற நம்பிக்கையைத்தான் பிற சமூக விரோதிகளிடம் ஏற்படுத்தியிருக்கின்றன. முதலமைச்சர் முதல் கிராம - வார்டு பிரமுகர் வரை அரசியல்வாதிகளிடையேயும், தலைமைச் செயலர் முதல் நாலாந்தர அரசு ஊழியர் வரை இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் எங்கும் நீக்கமற நிறைந்து விட்டன. கட்டிதட்டிப் போன இந்த அமைப்பைப் பூகம்பக் குலுக்காக குலுக்கித் தலை கீழாகக் புரட்டிப் போடும் நடவடிக்கை எதையும் செய்து விடவில்லை. எனவேதான் கோடி கோடியாகச் சேர்த்து வைத்துள்ள முன்னாள் மந்திரிகள் திருநாவுக்கரசு, கண்ணப்பன், முத்துசாமி போன்றவர்கள் இன்னமும் அரசியலில் ஆட்டம் போடுகிறார்கள். உள்ளூராட்சித் தேர்தல்களில் அ.தி.மு.க. பிரமுகர்கள் கணிசமான அளவு வெற்றி பெற்றிருக்கிறார்கள். அ.தி.மு.க. ரௌடிகள் பத்திரிகையாளர்களைத் தாக்குவதும் தொடர்கிறது.

### விலைவாசி உயர்வு, வெள்ளத்தால் அவலம் வேடிக்கை பார்க்கிறது தி.மு.க. அரசு

ஏழை, எளிய மக்கள் மட்டுமல்ல நடுத்தர மக்களும்கூட தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அரிசி, காய்கறி போன்ற அன்றாட உணவுப் பொருட்களின் திடீர் விலையேற்றம் இடியெனத் தாக்குகிறது. பால் மற்றும் பெட்ரோலியப் பொருட்களை விலையேற்றம் செய்து மாநில, மத்திய அரசுகளே வழிகாட்டி விட்டன. பல நாட்கள் கொட்டிய மழை வெள்ளத்தால் வீடு - வாசல் வேலை இழந்த ஏழை, எளியவர்களும், பயிர் - விளை பொருட்களை இழந்த விவசாயிகளும் நிவாரணமின்றித் தவிக்கின்றனர்.

நிர்வாகத்தில் சூரப்புலிகள் எனப் பீற்றிக் கொள்ளும் தி.மு.க.வினர் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவோ வெள்ள நிவாரணப் பணிகளை ஒழுங்கமைக்கவோ நடவடிக்கை எடுக்கவே இல்லை. வெறும் சொற்சவடால் அடித்து, புள்ளி விவரங்களை ஒப்பீடு செய்து விலையேறவில்லை என்று புளுகிறார், கருணாநிதி. ஆந்திராவில் புயலாலும், தமிழ்நாட்டில் வெள்ளத்தாலும் நேரிட்ட விவசாய சேதங்கள்தாம் விலையேற்றத்துக்குக் காரணம் என்கிறார். போலிக் குடும்ப அட்டைகளை இன்னொரு காரணமாகக் கூறி, புகைப்படத்துடன் கூடிய வண்ண வண்ண அட்டைகள் தருவதற்கு நடவடிக்கை எடுக்கிறார். ஏகாதிபத்தியத்தின் ஆணைக்குட்பட்டு, போதிய உணவு தானியக் கையிருப்பு சேமிப்பு வைக்கத் தவறி, சந்தை விலையை முறைப்படுத்தும் வழிமுறையை மத்திய மாநில அரசுகள் கைவிட்டு விட்டன. இதனால் புயல், வெள்ளப் பாதிப்புகளுக்கு ஏற்ப தகுந்த நடவடிக்கை எடுத்து, விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாமல் போய் விட்டது. வடநாட்டிலும் திடீரென்று கோதுமை விலை உயர்ந்து உணவுக் கலகங்கள் ஏற்படும் நிலை உருவாகி விட்டது.


படிப்பகம்

www.padippakam.com

மேலும் மேலை நாடுகளின் சந்தையோடு நேரடி பிணைப்பு ஏற்பட்டு விட்டதால் விலைவாசி தாறுமாறாக ஏறுகிறது. தாராளமயமாக்கல் உட்பட புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்ப்பதாகத் தேர்தலுக்கு முன்பு தீர்மானம் போட்ட கருணாநிதி மத்திய அரசில் பங்கேற்பதால் வாய்பொத்திக் கிடக்கிறார். பெட்ரோலியப் பொருள் விலையேற்றத்தைக் கண்டித்து கருணாநிதி பேசிய போதும், ''அது தவிர்க்க முடியாதது; மீண்டும் விலையேற்றுவோம்'' என்கிறார், தி.மு.க.வின் மத்திய மந்திரி டி.ஆர்.பாலு. எப்பொழுதும் விலைவாசி ஏற்றத்துக்கு மத்திய அரசுதான் காரணம் என்று கைகாட்டும் கருணாநிதி, அங்கு ஐக்கிய முன்னணி அரசில் பங்கேற்பதால் விழி பிதுங்கி நிற்கிறார்.



பெங்களூரில் நடந்த காவிரிப் பேச்சுவார்த்தையில் கருணாநிதியும், ஜே.எச். படேலும்: குல்லாய் கருணாநிதிக்கு மட்டுமல்ல; தமிழ்நாட்டு மக்களுக்கும் தான்

பல நாட்கள் அடை மழையில் தமிழ்நாடே தத்தளிக்கையில் நிர்வாகத் திறமைக்குப் பேர்போன கருணாநிதி ஆட்சி செயலிழந்து போனது. மற்ற பிற முதல்வர்களைப் போலன்றி எலிக்காப்டரில் போய் பார்வையிடாது, பழுதடைந்த சாலையிலும் போய் பாதிக்கப்பட்ட மக்களிடம் ''துக்கம்'' விசாரித்து, அதையும் விளம்பரப்படுத்தி அனுதாபம் தேடிக் கொண்டார். ஆனால் அப்போது வாக்களித்தபடி நிவாரணம் எதுவும் முறைப்படி ஏழை எளிய மக்களுக்குப் போய்க் கிடைக்கவேயில்லை. இதிலும் அதிகாரிகளும் ஆளுங் கட்சிப் பிரமுகர்களும் தலையிட்டுச் சுருட்டிக் கொண்டனர். வெள்ள நிவாரண நிதியாக 750 கோடி ரூபாய்க்கு மேல் மத்திய அரசிடம் கேட்டு மன்றாடி வெறும் 25 கோடி ரூபாய் தான் கிடைத்தது; அதையும் தராது இன்னமும் இழுத்தடித்து வருகிறது; தானே பங்கேற்கும் ஐக்கிய முன்னணி அரசின் மாற்றாந்தாய் போக்கைக் கண்டிக்கும் திராணியற்ற கருணாநிதி, ''கோப்பு நகர மறுக்கிறது'' என்று புலம்புகிறார்.

### தன் கையையே எடுத்துக் கண்ணைக் குத்துவது போல கருணாநிதியை வைத்தே தமிழர் உரிமை பறிப்பு

கருணாநிதியின் இன்றைய, இறுதி இலட்சியம் எல்லாம் சிந்தாமல் சிதறாமல் ஆட்சிப் பொறுப்பை தனது வாரிசிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுதான். முன்பு இரண்டு முறை நடந்ததைப் போல, தி.மு.க. ஆட்சியைக் கலைத்து விடுவதற்கான வாய்ப்பு, நிலைமை எதுவும் ஏற்பட்டு விடக் கூடாது என்ற எச்சரிக்கை அவரை எப்போதும் கவ்விக் கொண்டுள்ளது. தமிழ் மக்களைச் சார்ந்து நின்று, மத்திய ஆட்சியாளர்களுக்கெதிராகப் போராடி, தனது ஆட்சியுரிமையைத் தக்க வைத்துக் கொள்ளும் திராணியோ, துணிவோ கருணாநிதியிடம் கிடையாது. சரணாகதி தான் தனது ஆட்சிக்கான பாதுகாப்பு என்று எப்போதோ முடிவு செய்து விட்டார்.

எதிர்க்கட்சியாக இருந்தவரை, ''காவிரி நீர் பிரச்சினையில் பேச்சு வார்த்தைக்கே இடமில்லை; நடுவர் மன்றத் தீர்ப்பே ஒரே வழி; இடைக்காலத் தீர்ப்பை அமலாக்குவதே சரியானது'' என்று கூறினார். இடைக்காலத் தீர்ப்பை அமலாக்குவதை ஒரு நிபந்தனையாக முன்வைக்காது, பேச்சு வார்த்தை என்ற பெயரில் இழுத்தடிப்பதையே உத்தியாகக் கொண்ட கர்நாடக அரசின் தந்திரத்தை ஏற்று, பேச்சு வார்த்தைக்குப் போய் தோல்வி கண்டார். மீண்டும் உச்சநீதி மன்றத்தில் வழக்காடுவது என்ற பழைய நிலைக்கே சரிந்தார். நடுவர் மன்றத்தையும் அதன் தீர்ப்பையும் உதாசீனப்படுத்தும் கர்நாடக அரசின் மீதும், பிரதமர் தேவே கவுடா மீதும் நம்பிக்கை இழந்த காவிரி நடுவர் மன்றத் தலைவர் சித்ததோஷ் முகர்ஜி பதவி விலகி விட்டார். பல மாதங்கள் கழித்து அந்த இடத்துக்கு வேறு ஒருவரை நியமித்ததே பெரிய வெற்றியெனக் கருணாநிதி சாதிக்கிறார்.

அதேபோல ஈழத் தமிழர் பிரச்சினையிலும் பச்சை துரோகம் புரிகிறது, தி.மு.க. அரசு. சிங்கள இராணுவத்தின் பயங்கரவாதக் கொலை வெறித் தாக்குதலில் இருந்து தப்பித்து தமிழகம் வரும் ஈழ அகதிகளைப் பிடித்துச் சிறையிலும், சிறப்பு முகாம்களிலும் அடைக்கிறது. ஈழ ஆதரவு, புலி ஆதரவு சக்திகளுக்கு எச்சரிக்கை மேல் எச்சரிக்கை விடுக்கிறது. தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் தள்ளுவேன் என மிரட்டுகிறது. புலி ஆதரவுப் பேச்சுக்காக சிலரைக் கைதும் செய்கிறது. புலித் தலைவர் பிரபாகரனைப் பிடித்து வந்து தண்டிப்பதையும், புலிகள் அமைப்பிற்குத் தடைவிதித்துள்ளதையும் தான் ஏற்பதாகவும் கருணாநிதி ஜெயின் கமிசனில் சாட்சியமளிக்கிறார். ஈழப்பிரச்சினையில் மத்திய அரசின் நிலைதான் தன்னுடையது என்று சொல்லி, ஈழத்தில் தமிழர் துரோக பொம்மை ஆட்சியை நிறுவும் இந்திய - இலங்கை அரசுகளின் சதித் திட்டத்துக்கு ஒத்தூதுகிறார்.

### கருணாநிதி ஆட்சியில் கண்துடைப்பு நடவடிக்கைகளும், தீராத பிரச்சினைகளும்

தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்சினைகள் பல இருப்பினும், அவற்றைத் தீர்த்து வைப்பதில் அக்கறை காட்டுவதை விட்டு வழக்கமாக எல்லா ஆட்சியாளர்களும் செய்யும் கண்துடைப்பு வேலைகளையே செய்து விட்டு, பத்திரிகைகள் தரும் ஆதரவினால் பெருமையடித்துக் கொள்கிறார். ஆனால் தனது கட்சியின் உயிராதாரமான கொள்கைகள் எனச் சவடால் அடிக்கும் 69 சதவீத இட ஒதுக்கீடு, மாநில சுயாட்சி, தமிழை ஆட்சி மொழியாக்குவது போன்றவற்றைக் கிடப்பில் போட்டு விட்டார். கருணாநிதியும் அவரது மருமகன் மாறனும் சேர்ந்து கொண்டு அந்நிய ஏகபோகங்களுக்கும், உள்நாட்டுத் தரகு முதலாளிகளுக்கும் நடைபாவாடை விரிக்கும் அதே சமயம், பின்னி, ஸ்டாண்டார்டு மோட்டார்ஸ், சவுத் இண்டியா விஸ்கோஸ் போன்ற ஆலை மூடல்களுக்கும், நெசவாலைகளும், உள்ளாடைத் தொழில்களும் நசிந்து தொழிலாளர் வேலை இழந்து தவிக்கும் பிரச்சினைக்குத் தீர்வும் காணவில்லை. பெருகிவரும் வேலை இல்லாத் திண்டாட்டம் தீரவும் வழி காணவில்லை. சாதி மதவெறிப் படுகொலைகளும், கிரிமினல் கும்பல்களின் ஆதிக்கமும் குறைந்து விடவில்லை; வளரவே செய்கின்றன.

அதே சமயம் உள்ளூராட்சி, கூட்டுறவுத் தேர்தல்களில் ஆளுங் கட்சிப் பிரமுகர்களின் ரௌடித்தனம், சசிகலாவைப் போல மு.க. அழகிரியின் அதிகார முறைகேடு, ஆடம்பரக் கூத்துகள், ஆற்காடு வீராச்சாமி போன்ற பழைய பெருச்சாளிகளின் இலஞ்ச - ஊழல்கள், வீழ்த்தப்பட்ட அ.தி.மு.க. ஆட்சியின் பாதையில் தி.மு.க. அரசும் நடக்கத் துவங்கி விட்டதையே காட்டுகின்றன.

• ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# பத்திரிகைகள் தூக்கி நிறுத்தும் மூப்பனார் – சிதம்பரம் பரிசுத்தவான்களா?

காமராஜரின் அரசியல் வாரிசு. எளிமையானவர். கறைபடியாத கரங்களுக்குச் சொந்தக்காரர். தமிழகத்தை சீர்திருத்த வந்த செம்மல். ஒளிவிளக்கு. இப்படியாக த.மா.கா. தலைவர் மூப்பனாருக்கு ஒரு ஒளிவட்டம் போட்டு வருகின்றன பெரும்பான்மையான பத்திரிக்கைகள். கூடவே த.மா.கா.வின் தலைவர்களில் ஒருவரும் மத்திய நிதி அமைச்சருமான ப. சிதம்பரத்தையும் பற்றி புகழ்ந்து எழுதாத பத்திரிக்கைகள் இல்லை எனலாம்.

இப்படி இவர்களை அரசியல் சந்தையில் நிறுத்துவதற்கு காரணங்கள் உண்டு. 1967-க்குப் பின் காங்கிரசு போன்ற ஒரு தேசியக் கட்சி தமிழகத்தில் தனித்து நின்று ஆட்சியைப் பிடிக்க வாய்ப்பின்றிப் போனது. இங்கு ஒரு சில எம்.பி. சீட்டுகள் வேண்டுமென்றாலும் கூட ஏதாவது ஒரு திராவிடக் கட்சியுடன் கூட்டு சேர்ந்தாக வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்நிலை மாறுவதற்கு த.மா.கா. வளர்ச்சி உதவும் என்று கணக்குப் போட்டு காய்களை நகர்த்தி வருகின்றனர்.

ஆனால் த.மா.கா. தலைவர்களுக்கு இதற்கான யோக்கியதை, ஆற்றல் உண்டா? கிடையாது.

த.மா.கா. தலைவர் மூப்பனார் எம்.பி.யாகவும், எம்.எல்.ஏ.வாகவும் பல ஆண்டுகளாக இருந்தாலும் சட்டமன்றத்தில் பத்து நிமிடம் கூட பேசியிருக்க மாட்டார். மாநிலங்களவையில் பேசியதாக வரலாறே கிடையாது. மக்கள் பிரச்சினைகளைப் பற்றி பேசியேயிராதவர்தான் மக்கள் தலைவர்!

இந்த 'மக்கள் தலைவர்' ஒரு முறையாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு எம்.பி.யாக ஆகியுள்ளாரா என்றால் அதுவும் கிடையாது. மக்களிடம் அவ்வளவு நம்பிக்கை. இன்றுவரை கொல்லைப்புற வழியாக மாநிலங்களவை எம்.பி.யாக மட்டுமே வலம் வருகிறார்.

மூப்பனாரின் தலைமையிலான முன்னாள் காங்கிரசோ இன்னாள் த.மா.கா.வோ மக்கள் பிரச்சினைகளுக்காக இன்று வரை போராடியதாக செய்தியோ, வரலாறோ கிடையாது. காங்கிரசின் ஐ.என்.டி.யு.சி தொழிற்சங்கம் என்றாலே முதலாளிகளின் கைக்கூலி சங்கம் என்றுதான் வரலாற்றின் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்று நாட்டையே அடகு வைக்கும் புதிய பொருளாதாரக் கொள்கைக்கும் தனியார்மயமாக்கத்திற்கும் ஐ.என்.டி.யு.சி.தானே தோள் கொடுத்து நிற்கிறது. வேறு எந்த தைரியத்தில் தொழிலாளருக்கு எதிரான கொள்கைகள் அமுலாக்கப்படுகின்றன?

விவசாயிக்கு சாணிப்பாலும் சாட்டையடியும் தானே நேற்றுவரை மூப்பனாரிடமிருந்து கிடைத்தவை. இன்று அந்தத் தஞ்சையே வறண்டு பாலையாகி வருவதற்கு மூப்பனாரின் 'தேசிய' காங்கிரசு தானே காரணம். அந்த காவிரி நீருக்குப் போராடியதாகவாவது வரலாறு உண்டா? கிடையாதே.

அகில இந்திய காங்கிரசின் அகில இந்தியத் 'தலைவராக' வலம் வந்தவர் மூப்பனார். உள்ளூரில் பண்ணையாராக அடாவடி செய்தவராதலால் பல மாநிலங்களில் உட்கட்சி மோதல்கள் நடந்த போது, அதற்கு கட்டைப் பஞ்சாயத்து செய்ய அனுப்பப்பட்டவர்தான் இவர். சுருக்கமாகச் சொல்வதானால் அகில இந்திய காங்கிரசின் அடியாள் தலைவர்.

இந்த அடியாள் தலைவர்தான் 'ஜெயலலிதா லஞ்ச ஊழல் பேர்வழி. அவரது கட்சியுடன் தேர்தல் உடன்பாடு கூடாது' என போர்க்கொடி உயர்த்தினாராம்! ஊழலை ஒழிக்கவே ரஜினி ஆசியுடன் த.மா.கா. கட்சி கண்டாராம்! சரிதான்.

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் வெடித்துச் சிதறியபோது இந்த ஊழல் ஒழிப்பாளர் ராஜீவிற்கு பாதுகாப்பாளராகத் தானே செயல்பட்டார். இன்னும் ராஜீவ் காலத்திய கணக்கற்ற ஊழல்களுக்கு ஒத்து ஊதிக் கொண்டிருந்த இந்தப் பேர்வழிகளுக்கு இன்று ஊழல் கறைபடியாதவர்கள் என புகழாரம் வேறு. வெட்கக்கேடு! அது போகட்டும்! நேரு பரம்பரை. அவரை விட்டால் காங்கிரசுக்கு கதி கிடையாது என கதை விடலாம்.

இந்தப் புன்னகை மன்னன் ஊறுகாய் புகழ் ராவ் காலத்தில் மாதத்திற்கொரு ஊழல் நாறத் தொடங்கிய போது இவர் என்ன செய்தாராம்? ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல. பங்குச் சந்தை பேர ஊழலிலிருந்து தொலைபேசி ஊழல்வரை ராஜீவ் காலத்து ஊழல்கள் எல்லாம் கொசுறு எனுமளவிற்கு பல்லாயிரம் கோடி ரூபாய் ஊழல்கள் கொடி கட்டிப் பறந்த போது இந்த உத்தமர்கள் போர்க் கொடி உயர்த்தவில்லையே!

தாய்க் கட்சியான தேசிய காங்கிரசிலிருந்து விலகி தமிழ் மாநில காங்கிரஸ் கண்டபோதாவது ராவின் ஊழல்களுக்கெதிராக குரலாவது எழுப்பினார்களா? இல்லையே! இன்றைக்கும் ராவின் மீது நீதிமன்றம் இத்தனை நடவடிக்கைகள் எடுத்த பின்னும் கூட அந்த ஊழல், கிரிமினல், மோசடிகளுக்கெதிராக இன்றுவரை இன்னும் வாய் திறக்காததன் காரணம் என்னவோ?

இதற்கெல்லாம் காரணம் இல்லாமல் இல்லை. திருடனுக்கு தேள் கொட்டிய கதையாக முழித்துக் கொண்டுள்ளார்கள் த.மா.கா. தலைவர்கள்.

அலிபாபாவும் நாற்பது திருடர்களும் கதை போல த.மா.கா. கட்சியின் மேல் மட்ட - கீழ்மட்ட தலைவர்கள் என பெரும்பாலானவர்கள் கோடிக்கணக்கில் இந்திய வங்கியில் மக்கள் பணத்தைத் தின்று ஏப்பம் விட்டு விட்டனர்.

இந்நாள் த.மா.கா. எம்.பி. திருச்சி அடைக்கலராஜ் முறைகேடாக வாங்கிய கடன் 18 கோடி ரூபாய். சேலம் எம்.பி. தேவதாஸ் ரூ. 3.75 கோடி விழுங்கியுள்ளார். மத்திய மந்திரி திருச்செந்தூர் தனுஷ்கோடி ஆதித்தனின் மனைவி 1.5 கோடி ரூபாய் வாங்கி நாமம் சாத்திவிட்டார். திண்டுக்கல் எம்.பி. என்.எஸ். வி. சித்தன் சைக்கிள் டயர் தொழிற்சாலைக்கென ரூ. 4 கோடி வாங்கி இன்று ஆலையையும் காணோம்; பணமும் காணோம்.

இவையெல்லாம் இந்தியன் வங்கியில் வாங்கி கட்டப்படாத கடன்கள். தேவதாஸ், ஆதித்தன், சித்தன் முதலியோருக்கு டி.வி. புகழ் கோபாலகிருஷ்ணன் வங்கித் தலைவராயிருந்த போது கடனை தள்ளுபடி செய்துள்ளார். உபயம் மூப்பனார்.

1988-ல் தஞ்சாவூர் வங்கியில் மூப்பனாரின் உறவினர் சவுந்திரராஜ மூப்பனார் 2 கோடி ரூபாய் கடன் பெற்றார். அந்த வங்கி 50 கோடி ரூபாய் நட்டத்துடன் 1992-இல் இந்தியன் வங்கியுடன் இணைக்கப்பட்டது. அந்த ஆண்டே கோபால

இந்தியன் வங்கி முறைகேடுகளை முன்னின்று நடத்திய 'உத்தமர்' மூப்பனார்





படிப்பகம்

www.padippakam.com

கிருஷ்ணனின் உத்தரவுப்படி சவுந்திரராஜ மூப்பனாரின் 2 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

இன்னும் ஏ.ஆர். மாரி முத்து, ஓ.ஆர். ராமசாமி என த.மா.கா. தலைவர்கள் இந்தியன் வங்கியில் எவ்வித மதிப்பீடு, ஆய்வுமின்றி தொழில் நடத்த என முறையே ரூ. 1.5 கோடி, ரூ. 2 கோடி கடன் பெற்றனர். ராமசாமியின் கடன் ரூ. 2 கோடியை தள்ளுபடி செய்தார், கோபால கிருஷ்ணன். மாரிமுத்து இன்று வரை கடன் கட்டவில்லை.

இது நேரடியாக த.மா.கா. தலைவர்கள் மோசடியாக பெற்று ஏமாற்றிய இந்திய வங்கிப் பணம். இதுதவிர இன்னும் பல நூறு பேருக்கு மூப்பனார் சொல்லி பணம் தரப்பட்டு இன்று இந்தியன் வங்கியே திவால் நிலைக்குள்ளாகியுள்ளது.

ஆக ராவ் காங்கிரஸ் அகில இந்திய அளவில் பணத்தை சூறையாடிய போது இங்கு மூப்பனார் தலைமையின் கீழ், மாநில அளவில் இந்தியன் வங்கியை சூறையாடிவிட்டனர்.

இன்றைக்கு இந்த மோசடிகளை மூடி மறைக்க வங்கி தலைவர், நிர்வாகி பொறுப்பிலுள்ளவர்களை நேரடியாக சி.பி.ஐ. (CBI) போலீசு கைது செய்து விசாரிக்க தடை என புதிய சட்டம் கொண்டு வந்துள்ளார் த.மா.கா. கட்சித் தலைவரில் முக்கியமான வரும் நிதி அமைச்சருமான ப. சிதம்பரம்.

பங்குச் சந்தை மோசடியில் ஈடுபட்டு கோடிக் கணக்கில் சுருட்டியது ஃபேர் குரோத் என்ற நிறுவனம். அந்நிறுவனத்தின் பங்குகளை அதன் வெளியீட்டு விலைக்கே சிதம்பரத்தின் மனைவி பெற்றார். இது ஒருவகை லஞ்சம்தான். பங்குச் சந்தை மோசடி அம்பலமானபின் யோக்கியர் போல சிலகாலம் பதவி துறந்தார் சிதம்பரம்.

பார்ப்பன பாசிச மதவெறிக் கட்சிகளான சிவசேனா - பாரதீய ஜனதா கூட்டணி ஆட்சி மகாராட்டிரத்தில் என்ரான் திட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்தது. தனக்கான கமிஷன் பெற வேண்டி, அப்போது என்ரான் நிறுவனத்திற்கு சட்ட ஆலோசனை வழங்கி நாட்டை அடகு வைத்தவர் தான் இந்த சிதம்பரம். இன்றைக்கும் காங்கிரசின் அதே பாதையில் நாட்டை அன்னிய நாடுகளுக்கு அடகு வைக்கும் திருப்பணியை மிகப் பொறுப்புடன் செய்து வருகிறார்.

இன்றைக்கு மதுரை எம்.எல்.ஏ. தெய்வநாயகத்தின் அரிசி ஆலையில் பல நூறு மூட்டைகள் ரேசன் அரிசி பதுக்கி வைக்கப்பட்டவை பிடிபட்டுள்ளன. ரேசனைத் திருடி ஏழைகளின் வயிற்றிலடிக்கும் இந்த தெய்வநாயகம் த.மா.கா. எம்.எல்.ஏ.



சிதம்பரம்: பங்குச் சந்தை ஊழலின் பங்குதாரர்; ஏகாதிபத்திய அடிவருடி

இச் செய்தியை மூடி மறைக்க முயன்றும் வெளி வந்து நாறிக் கொண்டுள்ளது. இவர் மீது இன்றுவரை எந்த நடவடிக்கையுமில்லை.

இந்த ஊழல் பெருச்சாளிகள்தான் ஊழல் எதிர்ப்பு உத்தமர்களாக தமிழகத்தில் உலா வருகிறார்கள்.

கிரிமினல் நடவடிக்கைகளிலும் சற்றும் சளைத்தவர்களல்ல இந்த காங்கிரசு குண்டர்கள். இவர்களின் பல பொதுக்குழு கூட்டங்களே இதற்கு நல்ல சான்று. தமிழகத்தில் வேரற்றுப் போனதால் மக்கள் மத்தியில் அடிதடி நடத்தி தனது வீரப் பிரதாபங்களைக் காட்ட வழியற்றுப் போனார்கள்.

அதற்கு ஈடுகட்டதான் நைனா சஹானியைக் கொன்று தண்டூரி அடுப்பில் எரித்த சுசீல் சர்மாவுக்கு தமிழகத்தில் அடைக்கலம் தந்தார், அன்றும் இன்றும் எம்.எல்.ஏ.வான செல்லக்குமார்.

தி.மு.க.வினருக்கு முதுகெலும்பில்லாமலிருக்கலாம். சூடு சொரணையற்று இருக்கலாம். புலி பீதியூட்டி 356 வது சட்டப்பிரிவின் கீழ் 1991-இல் கவர்னரது மறுப்பையும் மீறி ஆட்சியைக் கலைத்து 'ஜனநாயகப்' படுகொலை செய்தது காங்கிரசு. அதை அகமகிழ்ந்து வரவேற்ற மூப்பனார் - சிதம்பரம் கும்பல்தானே அடுக்கடுக்காக கேள்விக்கணைகளை வீசி புலி ஆதரவாளர் கருணாநிதி என முத்திரை குத்தினர்?

சரி! இன்றைக்கும் ஈழப் பிரச்சினையில் த.மா.கா. நிலை என்ன? தி.மு.க. ஆட்சியை மீண்டும் கலைக்க புலிபீதியூட்டுவதை த.மா.கா. எம்.பி. ஜெயந்தி நடராஜன் தானே தொடங்கியுள்ளார். அங்கு கொல்லப்படும் அப்பாவி ஈழத் தமிழருக்கு ஆதரவாக ஒரு வார்த்தை அறிக்கையுண்டா? இங்கு அகதிகள் படும் அவலங்களைத் தெரிந்தும்தானே அவர்களை இங்கிருந்தும் விரட்ட வேண்டும் என அறிக்கை விட்டார்கள்!

உலகம் முழுதுமுள்ள ஜனநாயகவாதிகளை அதிர வைத்த பாபர் மசூதி இடிப்பை நடத்தியது பா.ஜ.க. - சிவசேனா மட்டுமல்ல. ராவும் காங்கிரசும் தானே உடனிருந்து இடித்தவர்கள். இன்றைக்கு குல்லா வைத்துக் கொண்டு சிறுபான்மையினர் காவலன் என வேஷம் கட்டுகின்றனர். மசூதி இடித்ததற்கு பதில் என்ன? அதற்கு உடந்தையாயிருந்ததற்கு என்ன சொல்கின்றனர்?

முஸ்லிம் மட்டுமல்ல. தலித் மக்களின் பாதுகாவலனும் தான் தான் என இறுமாப்புடன் கூறுகின்றனர் த.மா.கா.வினர். ஆனால் '89 தேர்தலின் போது தாங்கள் நடத்திய சாதிக் கலவரங்களை மூப்பனார் பரிவாரங்கள் மறந்திருக்கலாம். தமிழக மக்கள் மறந்திருக்க நியாயமில்லை.

காமராஜரின் வாரிசு என மாய்ந்து மாய்ந்து எழுதுகின்றனர். சுவரொட்டி ஒட்டுகின்றனர். உண்மைதான்! அகில இந்தியாவிற்கும் சாதி அரசியலைக் கொண்டு சென்றவர் காமராசர். அவரின் வழியிலேயே சாதி - மத வெறியைத் தூண்டி, பிளவுபடுத்தி, மோதவிட்டு - பின் சிறுபான்மையினரின் பாதுகாவலன் என முதலைக் கண்ணீர் வடிக்கும் மூப்பனார் அச்சாக காமராசரின் வாரிசுதான்.

சத்தியமூர்த்தி பவனை காங்கிரசுக்கு தாரை வார்த்து, காங்கிரசுத் தலைவராக ஆனவர்தான் மூப்பனார். வேறு எந்தத் தகுதியும் திறமையும் அற்றவர்.

இன்று தமிழகத்தில் வேரும் விழுதும் அற்றுப் போனதால் கழிசடை சினிமா நாயகன் ரஜினியை முன்னிறுத்தி த.மா.கா.வை தமிழகத்தில் ஊன்றி விடலாம் என மனப் பால் குடித்து வருகின்றனர்.

அதன் முதற்கட்டமாக ஊழல் ராணி ஜெயாவிற்கு எதிராக வரிந்து கட்டி அ.தி.மு.க.வை ஒழிக்கும் வேலையில் இறங்கியுள்ளனர். அதன் பின் அடுத்த இலக்கு தி.மு.க.தான். கருணாநிதியற்ற தி.மு.கவை ஒழித்து விடுவது எளிது என கணக்குப் போட்டு காய்களை நகர்த்தி வருவதால் இன்று அடக்கி வாசிக்கின்றனர்.

ராஜீவ், ராவ் காங்கிரசின் ஊழல்களைப் பற்றி வாயே திறக்காத இந்த கும்பலுக்கு ஊழலை எதிர்க்க என்ன அருகதை உள்ளது?

இந்திய வங்கியை சூறையாடியது மட்டுமின்றி இன்றைக்கும் அதன் முன்னாள் தலைவரையும் தன்னையும் பாதுகாக்க புதிய சட்டம் இயற்றிக் கொண்டே மறுபுறம் ஊழலை ஒழிக்க வந்த உத்தமர்களாக வேடம் போடுகின்றனர்.

இவர்களை உத்தமர்களாக்க பத்திரிக்கைகள் போடும் ஒளி வட்டத்தில் இவர்களின் இருண்ட பக்கங்கள் மக்களுக்கு வெளிச்சமாகி வருகின்றன.

● ராசு



படிப்பகம்

www.padippakam.com

# ஆசைக் கனவுகள் ஆழ்கடலில் கொலையுண்டன

மேலை நாடுகளில் வேலை பெறும் நோக்கத்தோடு, மோசடி பயண முகவர்களை நம்பிச் சென்ற 300-க்கும் மேற்பட்ட ஆசிய நாடுகளின் இளைஞர்கள், கடந்த கிறிஸ்துமஸ் நாளன்று கிரீஸ் நாட்டின் மால்டா தீவு அருகே மத்திய தரைக் கடலில் கோரமாக மூழ்கடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 227 பேர் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்களாவர். ஆழ்கடலில் நடந்த இந்த அட்டூழியத்தை ஏறத்தாழ 15 நாட்களுக்குப் பின்னரே அறிந்து, மகனைப் பறிகொடுத்த தாய், சகோதரனை இழந்த சகோதரி, கணவனை இழந்த இளம் மனைவி என பஞ்சாப் மாநிலமே மீளாத்துயரில் மூழ்கியுள்ளது.

மேலை நாடுகளில் கள்ளத்தனமாகக் குடியேறி, வேலை செய்து சம்பாதிக்கும் நோக்கத்துடன் பஞ்சாபைச் சேர்ந்த பல இளைஞர்கள் தரகர்கள் மூலம் டெல்லியைச் சேர்ந்த மூன்று மோசடி பயண நிறுவனங்களிடம் தலா 2 முதல் 3 லட்ச ரூபாய் வரை கொடுத்துள்ளனர். பல பெற்றோர்கள், தமது மகன் எப்படியாவது மேலை நாடுகளுக்குச் சென்று நிறைய சம்பாதிக்க வேண்டும் என்ற கனவுகளோடு, தமது நிலம் மற்றும் டிராக்டரை விற்றுத் தவணை முறையில் பணத்தைக் கொடுத்துள்ளனர். இதே போல பாகிஸ்தான், இலங்கையைச் சேர்ந்த பல இளைஞர்கள் அந்நாட்டு மோசடி முகவர்களிடம் 3 முதல் 5 லட்ச ரூபாய் வரைக் கொடுத்துள்ளனர். போலி கடவுச் சீட்டுகள் மூலமும், குறிப்பிட்ட கப்பலின் ஊழியர்கள் என்ற பெயரிலும் இவர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, சரக்கு கப்பல்களில் வேறு வேறு பாதைகளில் கொண்டு செல்லப்பட்டனர்.

பின்னர் இவர்கள் துருக்கி நாட்டின் லார்கானா துறைமுகத்திலிருந்தும், எகிப்து நாட்டின் அலெக்சாண்டிரா துறைமுகத்திலிருந்தும் இரு கப்பல்களில் கொண்டு வரப்பட்டு, மத்திய தரைக்கடலின் நடுவே ''யோஹன்'' என்ற கப்பலுக்கு மாற்றப்பட்டனர். இக்கப்பல் கள்ளக்கடத்தல் தொழிலில் ஈடுபட்டு வருவதால் சர்வதேச போலீசாரால் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகும். இக்கப்பல் மால்டா தீவு அருகே நெருங்கியதும், கிரேக்க கடற்படையினர் அதைச் சுற்றி வளைத்துக் கைது செய்ய முற்பட்டனர். இச் செய்தியை அறிந்ததும் கடத்தல் கப்பலின் தலைமை மாலுமி பயணிகள் அனைவரையும் துப்பாக்கி முனையில் மிரட்டி, அவசரமாக ஒரு சிறு படகில் இறக்கித் தள்ளி, தப்பியோடுமாறு மிரட்டத் தொடங்கினான்.

நான்கு மாதங்களாக அரைகுறை உணவுடன், குளிக்கக்கூட முடியாமல், நாற்றமடிக்கும் சரக்குக் கப்பலில் அவதிப்பட்டு பயணம் செய்த இளைஞர்கள், மால்டா தீவை நெருங்கி விட்டதாக நம்பிக்கையுடன் இருந்த வேளையில், இத்திடீர் அச்சுறுத்தலால் பீதியடைந்தனர். பலர் அவசரமாக படகில் இறங்கிய அதே சமயம், இக்கொடுமையை எதிர்த்து வாக்குவாதம் செய்த இளைஞர்களைக் கப்பலில் இருந்த குண்டர்கள் மிருகத்தனமாக அடித்துக் கடலில் வீசி எறிந்தனர். ஆழ்கடலில் தத்தளித்த அவர்களைக் காப்பாற்ற யாருமில்லாமல் மூழ்கி இறந்தனர்.

மறுபுறம், அச்சிறு படகு ஏறத்தாழ 100 பேர் வரைதான் தாங்கக் கூடியது. அதில் 300 பேருக்கு மேல் கட்டாயமாக ஏற்றப்பட்டதால், பாரம் தாளாமல் தத்தளித்த அப்படகு, கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கத் தொடங்கியது. எங்கும் மரண ஓலம் எதிரொலித்தது. கடுங்குளிரில் நடுக்கடலில் தத்தளித்த அவர்களைக் காப்பாற்ற யாருமில்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் மூழ்கி மாண்டனர். கல்நெஞ்சக்காரர்களான ''யோஹன்'' கப்பல் மாலுமிகள், அவர்களை ஏறெடுத்தும் பாராமல் விரைவாகத் தமது கப்பலைத் திருப்பிக் கொண்டு சென்றனர்.

கடலில் தத்தளித்த இளைஞர்களில் 22 பேர் தட்டுத் தடுமாறி நீந்திச் சென்று அரை நினைவுடன் மால்டா கரையில் ஒதுங்கினர். அவர்களுக்கு முதலுதவி கூடச் செய்ய மறுத்து, சட்ட விரோதமாகக் குடியேறியதாகக் குற்றஞ்சாட்டி, கிரேக்க அரசு அவர்களைக் கைது செய்து சிறையிலடைத்தது. தமது சகோதரர்களும் நண்பர்களும் ஆழ்கடலில் மூழ்கடித்துக் கொல்லப்பட்ட கோரத்தை அவர்கள் கூறிய போதிலும், கிரேக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கள்ளத்தனமாகக் குடியேற வந்த ஆசிய நாடுகளின் கறுப்பர்கள் தானே என்ற இனவெறியோடு, இக்கொடுஞ் செயல் மீது அலட்சியம் காட்டினர்.

தொடர்ச்சி 11-ம் பக்கம்

''வேலை தேடிச்சென்ற என் மகன் எங்கே?'' - மகனைப் பறிகொடுத்த துயரில் குமுறும் தந்தை





படிப்பகம்

www.padippakam.com

# வரலாற்றுத் தவறும் வராத புரட்சியும்

## 'மார்க்சிஸ்ட்' கட்சி தரகர்களிடையே லடாய்

யாருக்குத்தான் பிரதமர் நாற்காலி மீது ஆசை இல்லை? கேசரி, பவார், வாஜ்பாய், லல்லு பிரதாத் யாதவ், மூப்பனார் எனப் பலருக்கு ஆசை இருக்கும்போது, மே. வங்க போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசுவுக்கு மட்டும் அந்த ஆசை இருக்கக் கூடாதா என்ன? கடந்த மே மாதத்தில் ஐ.மு. அரசை நிறுவியபோது, அவரும் பிரதமராக ஆசைப்பட்டு முயற்சி செய்தார். ஆனால் அவரது ''மார்க்சிஸ்ட்'' கட்சியோ, இம்முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டு, ஐ.மு. அரசை வெளியிலிருந்து ஆதரிப்பது என்று முடிவு செய்துவிட்டது.

இம்முடிவினால், தான் பிரதமராகும் வாய்ப்பு பறிபோன ஆத்திரத்தில், ''ஏஷியன் ஏஜ்'' நாளேட்டுக்கு புத்தாண்டு தினத்தில் அளித்த சிறப்பு நேர்காணலில், ''ஐ.மு. அரசில் மார்க்சிஸ்ட் கட்சி பங்கேற்காததன் மூலம் மாபெரும் வரலாற்றுத் தவறை செய்துவிட்டது'' என்று திருவாளர் ஜோதிபாசு தமது கட்சியின் முடிவை பகிரங்கமாகச் சாடியுள்ளார். மேலும் தமது கட்சியின் அரசியல் தலைமைக் குழுவில், ஐ.மு. அரசில் நேரடியாகப் பங்கேற்க ஆதரவான கருத்து இருந்தது என்றும், ஆனால் மத்தியக் கமிட்டியில் இது சிறுபான்மைக் கருத்தாக இருந்ததால் கொள்கை ரீதியாக வெற்றியடையவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். தமது கட்சித் திட்டத்தின் 112-வது பிரிவில், மாநில அரசுகளை அமைப்பது பற்றி மட்டுமே உள்ளது என்றும், மத்திய அரசில் பங்கேற்பது பற்றி அதில் குறிப்பிடப்படவில்லை என்றும், எனவே கட்சித் திட்டத்தைக் காலத்திற்கு உகந்ததாக மாற்ற வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இதுமட்டுமல்ல; இன்றைய ஐ.மு. கூட்டணியைக் கொண்டு ஒரு நிலையான அரசை இயக்க எங்களால் முடியும்; கடந்த 20 ஆண்டுகளாக இத்தகைய கூட்டணி ஆட்சியை நடத்திய அனுபவம் எங்களுக்கு இருக்கிறது; எனவே கவலைப்படாதீர்கள்; நாளை தேவே கவுடா மீது அதிருப்தி ஏற்பட்டால், நான் பிரதமராக இருந்து இந்த அரசைக் காப்பாற்றுவேன் என்று ஆளும் வர்க்கங்களுக்கும் கூட்டணிக் கட்சிகளுக்கும் விசுவாசமாக நம்பிக்கையூட்டுகிறார், பாசு.

ஆளும் வர்க்கங்களுக்கும் அவர்களின் எஜமானனாகிய ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் விசுவாசமாக சேவை செய்யக் காத்திருப்பதோடு மட்டும் பாசு நின்று விடவில்லை. கட்சி அணிகள் பெருமையாகப் பீற்றிக் கொள்ளும் கட்சிக் கட்டுப்பாட்டையும் இப்பேட்டியின் மூலம் ஜோதிபாசு தகர்த்தெறிந்து விட்டார். கட்சிக்குள் தமது கருத்தைச் சுதந்திரமாக விவாதிப்பது, பெரும்பான்மை முடிவை ஏற்றுச் செயல்படுத்துவது, தமது சிறுபான்மை கருத்தை பெரும்பான்மையாக்க கட்சிக்குள் தொடர்ந்து போராடுவது என்பதுதான் கம்யூனிஸ்ட் கட்சிகள் பின்பற்றி வரும் ஜனநாயக மத்தியத்துவ நடைமுறை.

ஆனால் 'மார்க்சிஸ்டுகள்', கம்யூனிசக் கொள்கைகளையும் புரட்சியையும் பூசையறையில் வைத்துவிட்டு, நாற்காலி சுகத்தையே இலட்சியமாகக் கொண்டுவிட்ட பிறகு, அதற்கேற்ப கட்சிக் கட்டுப்பாடுகளும் இன்று கந்தலாகிப் போய்விட்டது. இதர முதலாளித்துவக் கட்சிகளின் பாணியில், கட்டுப்பாடு ஏதுமின்றி தமது கட்சியில் நிலவும் கொள்கை மோதலைப் பகிரங்கமாகப் போட்டு உடைத்து விட்டார், திருவாளர் பாசு.

பாசுவின் இந்த நேர்காணலைத் தொடர்ந்து, கட்சிப் பொறுப்புகளிலிருந்து கல்தா கொடுத்து வீட்டில் முடக்கப்பட்டுள்ள நம்பூதிரிபாடு, கேளர முதல்வர் நாயனார், மத்தியக் கமிட்டி உறுப்பினர்களான சீதாராம் எச்சூரி, பிரகாஷ் கரத் முதலானோர் பாசுவின் கருத்துக்களைச் சாடி கண்டனம் தெரிவித்துள்ளனர். அதேசமயம், பொதுச் செயலாளர் சுர்ஜித்தும், மே. வங்கத்தின் மூத்த தலைவர்களும் பாசுவின் பேட்டியில் தவறொன்றுமில்லை என்று பாசுவுக்கு ஆதரவாக நிற்கின்றனர். சுருக்கமாகச் சொன்னால், ஜோதிபாசு - சுர்ஜித் - மே. வங்கத் தலைவர்கள் ஒரு கோஷ்டியாகவும், கேரளாவின் நம்பூதிபாடு வாரிசு நாயனார் - பிரகாஷ் கரத் - எச்சூரி முதலானோர் ஒரு கோஷ்டியாகவும் 'மார்க்சிஸ்டு' கட்சியில் பிளவுபட்டு நிற்கின்றனர்.

அதேசமயம், பாசு கோஷ்டிக்கும் பாசு எதிர்ப்புக் கோஷ்டிக்கும் அடிப்படையில் வேறுபாடு எதுவும் கிடையாது. நாடாளுமன்றத்தில் செல்வாக்கு செலுத்துமளவுக்குக் கூடுதலான கட்சி எம்.பி.க்கள் இல்லாத நிலையில், மத்திய அரசில் பங்கேற்பதில்லை என்று கட்சியின் பெரும்பான்மையினர் கொள்கை விளக்கம் அளிக்கின்றனரே தவிர, பங்கேற்கவே மாட்டோம் என்று கூறவில்லை. பலமாக இருந்தால் பங்கேற்போம் என்றுதான் எதிர்மறையில் கூறுகின்றனர்.

இப்படிச் சொல்லி, ஐ.மு. அரசில் பங்கேற்காமல் வெளியிலிருந்து அதை ஆதரிப்பதாக கட்சி அணிகளை வேண்டுமானால் ஏய்க்கலாம். ஆனால், 'மார்க்சிஸ்ட்' கட்சி ஐ.மு. அரசில் நேரடியாகப் பங்கேற்றுக் கொண்டுதான் இருக்கிறது. பொதுத் தேர்தலுக்குப் பின் ஐ.மு. அரசு அமைக்கத் தரகு வேலை பார்த்ததிலிருந்து, அதற்கு குறைந்தபட்ச பொதுத்திட்டம் வகுத்துக் கொடுத்தது மட்டுமின்றி, ஐ.மு. அரசின் வழிகாட்டும் குழுவில் பங்கேற்று அதை இயக்கிக் கொண்டிருப்பதும் இதே 'மார்க்சிஸ்டு'கள் தான்!. இந்த இலட்சணத்தில் பாசு கோஷ்டிக்கு எதிராக ஏதோ கொள்கைபூர்வமாகப் போராடுவதுபோல், கட்

''தவறைத் திருத்த கட்சியின் பெயரையும் கொடியையும் மாற்றிவிடலாமா?'' எனப் பாசுவிடம் கேட்கிறாரோ சுர்ஜித்





படிப்பகம்

www.padippakam.com

யின் பெரும்பான்மையினர் நாடகமாடுவது நல்ல வேடிக்கை! அதே சமயம், பகிரங்கமாகக் கட்சி முடிவை பாசு எதிர்த்த போதிலும்கூட அவர்மீது கட்சி நடவடிக்கை எடுக்க முடியவில்லை. முன்பு இதே விவகாரத்தையொட்டி, ''மார்க்சிஸ்ட் கட்சியில் இருப்பதே துரதிர்ஷ்டவசமானது'' என்று பாசு பகிரங்கமாகப் பேட்டியளித்த போதும்கூட, எதுவும் செய்ய முடியாத நிலையில்தான் அக்கட்சி இருக்கிறது.

புரட்சியைச் சாதிக்க 'இடதுசாரி' முன்னணி கட்டுவதாகக் கூறிவந்த போலிகள், பின்னர் 'இடது' ஜனநாயக முன்னணி, மக்கள் ஜனநாயக முன்னணி, ஐக்கிய முன்னணி என்று எல்லாவகை முதலாளித்துவக் கட்சிகளுடன் தேர்தல் கூட்டணி கட்டுவதை இப்போது நியாயப்படுத்துகின்றனர். இதிலே எந்த முன்னணி புரட்சியை சாதிக்கப் போகிறது என்பது அவர்களுக்கே வெளிச்சம்! இன்றைய அரசியலமைப்பில் போலிக் கம்யூனிஸ்டுகள் நிறுவனமயமாகிவிட்ட பிறகு,' ஆளும் வர்க்கங்களும் தமது செல்லப் பிள்ளைகளாக அவர்களை அங்கீகரித்து விட்ட பிறகு, இனி 'புரட்சி' செய்யவே அவர்களுக்கு அவசியமில்லாமல் போய்விட்டது. கர்நாடக - ஆந்திர மாநிலங்களுக்கிடையே அல்மாட்டி அணை தாவாவைத் தீர்ப்பதற்கான கமிட்டியில் ஜோதிபாசு பங்கேற்றிருப்பது, கேசரி - கௌடாவுக்கிடையே ஏற்படும் மோதலைச் சரிக்கட்டிச் சமரசப்படுத்தும் வேலையை சுர்ஜித் செய்து வருவது, உ.பி.யில் 'குடியரசு'த் தலைவர் ஆட்சியைக் கொண்டுவருவதில் சுர்ஜித் முக்கிய பங்காற்றியிருப்பது என ஐ.மு. அரசின் தரகர்களாக - புரோக்கர்களாகச் செயல்படுவதே இப்போது அவர்களுக்கு 'புரட்சி'யாகிவிட்டது.

மேலும், கேரளா - திரிபுரா - மே. வங்கம் ஆகிய மூன்று மாநிலங்களைத் தாண்டி வளரவே முடியாமல் 'மார்க்சிஸ்ட்' கட்சி தேக்கத்திலும் நெருக்கடியிலும் சிக்கிக் கொண்டு விட்டது. இந்நிலையில் நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானகரமான சக்தியாக 'மார்க்சிஸ்டுகள்' வளருவதற்கு அடிப்படையே இல்லாமல் போய்விட்டது. இந்த நெருக்கடியையும் சிக்கலையும் காட்டித்தான் மத்திய அரசில் பங்கேற்க வேண்டும், கட்சித் திட்டத்தைத் திருத்த வேண்டும் என்று ஜோதிபாசு தனது கருத்தை நியாயப்படுத்துகிறார். வலது கம்யூனிஸ்டுகளின் வழியில் - ஐரோப்பிய போலி சோசலிசக் கட்சிகளின் வழியில் செல்லும் கோர்ப்பச்சேவின் கொள்கையைத்தான் அவர் ஆதரிக்கிறார்.

பாசு கூறுவதுபோல, 'மார்க்சிஸ்டு' கட்சி மாபெரும் வரலாற்றுத் த்வறைச் செய்துவிட்டது என்பது உண்மைதான். கட்சியின் பெயரையும், கொடியையும் இன்னமும் மாற்றிக் கொள்ளாததுதான் அந்த மாபெரும் தவறு!

• குமார்

# ஈழம்:
# மீண்டும் பொம்மையாட்சியா?

''போரை நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்ட வாக்களியுங்கள்'' என முழங்கி, ஓட்டுப் பொறுக்கி ஆட்சிக்கு வந்த அதிபர் சந்திரிகாவின் சமாதான முகமூடி ஆறு மாதத்திலேயே கிழிந்தது. சிங்கள இனவெறி மேலோங்கி நிற்கும் நிலையில், வெறும் இராணுவ நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டி விடலாம் எனப் பகல் கனவு கண்டார்.

போரைத் தொடங்கி, யாழ், கிளிநொச்சி பகுதிகளைக் கைப்பற்றினார். புலிகளை வவுனியா காட்டிற்குள் விரட்டினார். பல ஆண்டுகளாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பகுதிகளை இழந்த புலிகள், அடுத்தடுத்த கொரில்லாத் தாக்குதல்களில் சிங்கள இராணுவத்திற்கு மிகப் பெரும் இழப்புகளை ஏற்படுத்தி வருகின்றனர். சிங்கள இராணுவமோ போரைக் காரணமாகக் காட்டி, ஈழத் தமிழர்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தி வருகிறது.

அரசுப் படைகளுக்கும், புலிகளுக்குமிடையே அப்பாவி மக்கள் சிக்கித் தவிக்கின்றனர். சொந்த மண்ணிலேயே இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அல்லல்படுகின்றனர். உயிர்காக்கும் மருந்துகளும் தடுக்கப்பட்டு செத்து மடிகின்றனர்.

எப்படியாவது உயிர் பிழைக்கலாம் என அகதிகளாக கடல் கடந்து ஓடிவரும் ஈழத் தமிழர்கள் இங்கும் சிறையிடப்படுகின்றனர் - முகாம்களில் இழிவுபடுத்தப்படுகின்றனர். பல்லாயிரக்கணக்கில் பரிதவிக்கின்றனர். பார்ப்பன ஏடுகள் 'புலி' பீதியூட்டுகின்றன. 'மறத்' தமிழன் கருணாநிதி அரசு அகதிகளுக்குக் கருணை காட்டாது, முகாம்களில் சிறையிடுகிறது.

இந்நிலையில் சந்திரிகா அரசு ஈழத் துரோக கும்பல்களைக் கொண்டு ஒரு பொம்மை அரசை நிறுவுவது; அதன் தலைமையில் ஒரு துரோக ஒப்பந்தத்தைத் திணிப்பது; சிங்கள இனவெறி ஆதிக்கத்தின் கீழ் தமிழர்களை ஒடுக்குவது என்ற திட்டத்துடன் செயல்பட்டு வருகிறது.

இதற்காக சந்திரிகா அரசு அடுத்தடுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

• தொடர்ந்து இராணுவ மேலாண்மையைத் தக்க வைத்துக் கொள்ள அமெரிக்காவின் உதவியைப் பெறுகிறது சிங்கள இராணுவம். நவீன ஆயுதங்களைப் பெற்றுள்ளது. அமெரிக்க இராணுவ நிபுணர்கள் சிங்கள இராணுவத்திற்கு பயிற்சியளிக்கின்றனர்.

• தனது இராணுவ வெற்றியை அரசியல் ரீதியாகவும் நிலைநாட்ட, துரோக கும்பல்களைக் கொண்டு ஒரு பொம்மை அரசை நிறுவ முனைகிறது.

கடந்த நவம்பரில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளரும், எம்.பி.யுமான டக்ளஸ் தேவானந்தா இந்தியா வந்து சோனியா காந்தி, இந்துமத வெறி பாசிஸ்டுகள், மத்திய அமைச்சர்கள் எனச் சகலரையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

பத்திரிகையாளர்களின் நேர்காணலின் போது இந்தியா மறுபடியும் தலையிட்டு இந்திய - இலங்கை உடன்பாட்டை

ஈழத்தில் பொம்மையாட்சியை அமைக்க தேவே கவுடாவின் ஆதரவைக் கோரும் சந்திரிகா





படிப்பகம்

www.padippakam.com

அமலாக்கி, சமாதானத்தைக் கொண்டு வர வேண்டும் என இந்திய ஆக்கிரமிப்புக்கு அறை கூவியுள்ளார்.

• தெற்காசிய கூட்டமைப்பில் 'எல்லை பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதை பரஸ்பரம் கைவிடுவது' என்ற முறையில் புலிகளுக்கான ஆதரவைத் தடுப்பது; இந்தியாவில் புலிகள் மீதான தடையைத் தொடர்வது; இவற்றைச் செயலாக்குவதற்காக இந்தியா வந்த இலங்கை வெளிவிவகார அமைச்சரும், 'தமிழனுமான' கதிர்காமர் அதில் வெற்றியும் பெற்றார்.

• சந்திரிகாவிற்கு நெருக்கமானவரும் இந்திய ஆதரவாளரும் எம்.பி.யுமான நீலன் திருச்செல்வம் சென்னைக்கு வந்து கருணாநிதியை இரகசியமாக சந்தித்துப் பேசியுள்ளார்.

• இவற்றுக்குப் பின்னர் சந்திரிகா டிசம்பரில் டில்லி வந்து சென்றார். தேவேகவுடா, குஜ்ரால், கதிர்காமர், இந்திய வெளியுறவுச் செயலர், இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் என அனைவருடன் கூட்டாகப் பேசியுள்ளார். இந்திய அரசுத் தலைவர் சர்மாவையும் சந்தித்துப் பேசினார். பேச்சு வார்த்தைகளை இரகசியமாக்கி ஓய்வுப் பயணம் வந்தார் என மழுப்புகின்றனர். ஓய்வுப் பயணம் வந்த சந்திரிகா இந்திய இராணுவப் பாதுகாப்பிலுள்ள வடகிழக்கு மாநில முன்னாள் முதல்வர் வரதராஜ பெருமாளை இரகசியமாகச் சந்தித்தார். அவரைத் தன்னுடனேயே அழைத்துச் சென்றதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. இந்திய அரசு உண்மையை மூடி மறைக்கிறது.

**ஈழத் தமிழர் பிரச்சினையில் இழுபறி நிலை தொடர்வதற்கு சந்திரிகாவின் இனமேலாதிக்க அரசியல் - இராணுவ நடவடிக்கைகளும், புலிகளின் ஜனநாயக மறுப்பும், அரசியல் அற்ற இராணுவக் கண்ணோட்டமும் தான் காரணங்கள்.**

• இவ்வளவும் வடக்கில் ஊராட்சி தேர்தல்களை நடத்துவதற்கான முன்தயாரிப்புகள். ஏற்கனவே தனது அரசையே தமிழினத் துரோகக் குழுக்களின் எம்.பி.கள் ஆதரவுடன் அமைத்துள்ளது. உள்ளூர் மட்டத்திலும் தேர்தல் நடத்தி, தலை முதல் கால் வரை தமிழர்களை இனவாத அரசியல் கட்டமைப்புக்குள் நசுக்கி விட சந்திரிகா அரசு முயற்சி செய்து வருகிறது. இதற்கு பிரச்சினை வந்தால் உதவிக்கும் ஆதரவுக்குமே பல மட்டங்களில் இந்தியாவுடன் பேச்சு வார்த்தைகளை இரகசியமாக நடத்தியுள்ளது.

• தவிர சமாதான வேடமிட்டு 'அதிகாரப் பரவல் திட்டம்' என ஒரு தீர்வை சந்திரிகா அறிவித்துள்ளார். உண்மையில் அதிகாரம் எதையும் தராத, சிங்கள இனவெறி ஆதிக்கத்திற்கு ஊறு விளைவிக்காத இந்த மோசடித் தீர்வைக்கூட சிங்கள இனவெறியர்கள் நடைமுறைப்படுத்த அனுமதிக்கப் போவதில்லை. இதை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆளும் மக்கள் கூட்டணிக்குக் கிடையாது. இருந்தாலும் சந்திரிகா அரசு தமிழீழ துரோக அமைப்புகளுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளைத் தவிர்த்த ஒரு துரோக ஒப்பந்தத்திற்கு எத்தனித்து வருகிறது.

புலிகளோ, அரசியல் ரீதியான நேர்மையான நடவடிக்கையுமின்றி வெறும் இராணுவ நடவடிக்கைகளை மட்டுமே நடத்துகின்றனர். தவிர அப்பாவி முஸ்லீம், சிங்கள மக்கள் மீதும் சில தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதையே காட்டி புலிகள் அமைப்பை வெறும் பயங்கரவாத அமைப்பாக்கி, தனிமைப்படுத்தும் முயற்சியிலும் இறங்கி ஓரளவு வெற்றி பெற்றுள்ளது சந்திரிகா அரசு.

அமெரிக்காவும் பிரான்சும் புலிகளை 'சர்வதேச பயங்கரவாத' பட்டியலில் சேர்க்க முயன்று வருகின்றன. கனடாவும், சுவிசும், பிரிட்டனும் புலிகளின் பணவசூல் வங்கிக் கணக்குகளை முடக்கத் தொடங்கியுள்ளன.

சிங்கள அரசு ஈழத் தமிழர்களை தனி தேசிய இனமாகவும், அதன் சுயநிர்ணய உரிமையையும், வடக்கு - கிழக்கு மாகாண ஒருமைப்பாட்டையும் அங்கீகரிக்க மறுக்கின்றன. சந்திரிகா அரசு இராணுவம் மூலம் முற்றாக புலிகளை ஒடுக்குவது எனச் செயல்படுகிறது.

மறுபுறம் புலிகள், அமைப்போ தாம் மட்டுமே ஈழமக்களின் ஒரே பிரதிநிதி எனவும், தமது இராணுவ அதிகாரத்துக்கான நோக்கத்தை மட்டுமே வைத்துப் போரிடுகின்றனர். ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்குப் போராடும் பிற ஜனநாயக இயக்கங்களைக்கூடச் செயல்பட அனுமதிப்பதில்லை. அவர்களை ஒழித்துக் கட்டுவதை நடைமுறையாகக் கொண்டுள்ளனர். இன்றைய பெரும் இழப்புகளுக்கு இதுவும் முக்கிய காரணமாயுள்ளது. அப்பாவி சிங்கள, முஸ்லீம்களைப் படுகொலை செய்வதனால் ஈழத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குக் கூட சிங்கள, முஸ்லிம் மக்களிடம் ஆதரவற்றுப் போவதுடன் மேலும் மேலும் புலிகள் தனிமைப்பட்டு, ஒரு இராணுவ அமைப்பாக மட்டுமே சுருங்கி வருகிறது.

ஈழத் தமிழர்களின் அவல வாழ்விற்கு எவ்வித முடிவுமில்லாத, சிக்கலான, இழுபறி நிலை தொடர்வதற்கு சந்திரிகாவின் அரசியல் - இராணுவ நடவடிக்கைகளும், புலிகளின் ஜனநாயக மறுப்பும், அரசியல் அற்ற இராணுவக் கண்ணோட்டமும் காரணமாக அமைகின்றன.

• வேலு

8-ம் பக்கத் தொடர்ச்சி

ஏறத்தாழ 15 நாட்களுக்குப் பிறகு, இலண்டன் "அப்சர்வர்" நாளேட்டில் இந்த அதிக்கிரமம் பற்றிய செய்தி மெதுவாகக் கசியத் தொடங்கியதும், உலகமே அதிர்ச்சியடைந்தது. திரைகடலோடி திரவியம் தேடச் சென்ற எனது மகன் எங்கே? என் சகோதரன் எங்கே? எனது கணவன் எங்கே? என்று பஞ்சாபிலிருந்து குமுறல்கள் குவியத் தொடங்கிய பின்னரே, கிரேக்கத்திலுள்ள இந்தியத் தூதரகம் ஆமை வேகத்தில் செயல்படத் தொடங்கியது. உயிர் பிழைத்த 22 இளைஞர்கள் ஏறத்தாழ ஒரு மாத காலம் கிரேக்கச் சிறையில் வாடிய பிறகு, இப்போது இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். பஞ்சாப் - டெல்லியைச் சேர்ந்த மோசடி பயண முகவர்கள் கைது செய்யப்பட்டு, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

ஆனால், இத்தகைய கொடுஞ்செயல் இப்போது முதன் முறையாக நடப்பது அல்ல. கடந்த ஆண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு விமானத்தில் அனுப்பப்பட்ட சரக்குப் பெட்டிகளில் கள்ளத்தனமாகப் பதுங்கிக் கொண்டு வேலை தேடிச் சென்ற நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் மூச்சுத் திணறி மாண்ட கொடுமை இன்னமும் நெஞ்சிலே ஆறாத ரணமாக உள்ளது. அண்மையில் டெல்லி அருகே சவுதி அரேபியா விமானமும் கஜகஸ்தான் விமானமும் மோதி இறந்தவர்களில் பலர், போலி கடவுச் சீட்டுகளுடன் வேலை தேடிச் சென்ற இந்திய இளைஞர்கள்தான் என்ற செய்தி மெதுவாகக் கசிந்து நெஞ்சிலே ஈட்டியைப் பாய்ச்சியது. ஆனாலும் மோசடி பயண முகவர்கள் - மாஃபியாக்கள் - போலீசு - அரசியல்வாதிகளின் கள்ளக் கூட்டால் உயிரையே காவு கொள்ளும் இம்மனிதக் கடத்தல் இன்னமும் தொடரவே செய்கிறது.

பாசிச இந்திரா பஞ்சாபில் கொண்டு வந்த பசுமைப் புரட்சியும், அவரது வாரிசுகளின் தாராளமய - பொருளாதாரச் சீர்திருத்தங்களும் இந்நாட்டு இளைஞர்களின் வாழ்வில் எந்தவொரு முன்னேற்றத்தையும் கொண்டு வரவில்லை. மாறாக, வேலையின்மையைத் தீவிரமாக்கி, உயிரையும் காவு கொண்டு விட்டது என்பதற்கு மால்டா அருகே ஆழ்கடலில் நடந்த கொலைகளே இரத்த சாட்சியாய் நிற்கிறது.

• பாலன்

**அறிவிப்பு**

1-15 சனவரி 1997 புதிய ஜனநாயகம் இதழில் வெளியாகியிருந்த "தலித் விடுதலை", "தலித்தியம்" பற்றிய பதிலை வாசகர்கள் வரவேற்றுள்ள அதேபொழுதில், உஞ்சைராசன் மற்றும் சில தோழர்கள் விமர்சனங்களையும் சுட்டிக் காட்டியுள்ளனர். இவ்விமர்சனங்களுக்கான பதிலை அடுத்த இதழில் வெளியிடுவோம் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com



# திருவையாறு கலகம்

# தமிழ் மக்கள் இசை மரபை மீட்டெடுக்கும் போராட்டம்!

சனவரி 25-ந் தேதி தஞ்சை திலகர் திடலில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தினரால் நடத்தப் பெற்ற ''தமிழ் மக்கள் இசை விழா''விற்கு, இது நான்காம் ஆண்டு. வருடந்தோறும் அரசு இயந்திரத்தைத் தங்கள் விருப்பப்படி ஆட்டுவித்துக் கொண்டு, பார்ப்பன பண்டிதர்களால், மேட்டுக்குடி பார்ப்பனர்களுக்காகவே திருவையாறில் நடத்தப் பெறும் 'தியாகய்யர் ஆராதனை'க்கு எதிராக, நடத்தப்பெறும் விழாதான் தமிழ் மக்கள் இசை விழா.

அதே பொழுதில், வறட்டுத்தனமாக வாயளவில் எதிர்ப்பதே விழாவின் நோக்கமன்று. ''தமிழிசையில் இருந்து களவாடிய இசையே கர்நாடக இசை'' என்பதை நிறுவுவதற்கான போராட்டமிது; ''தமிழ் மக்கள் இசை மரபை மீட்கவும், விடுதலைக்கான கருவியாக்கி மீட்டவுமான'' உயர்ந்த குறிக்கோளைக் கொண்டு நடத்தப் பெறும் விழா தான் இது.

இக்குறிக்கோளை எட்டும் முதற்படியாக, ம.க.இ.க.வினரின் தமிழ் மக்கள் இசை விழா தமிழக உழைக்கும் மக்களை சென்று அடையத் தொடங்கியுள்ளது. நான்காம் ஆண்டு இசை விழாவிற்கு வந்திருந்த ஒவ்வொருவரும் இவ்வுண்மையை உணர்ந்திருக்க முடியும். கருத்தரங்கத்திற்கு மட்டும் மூவாயிரம் பேர் திரண்டிருந்தனர்; கலை நிகழ்ச்சிகளின் பொழுது இம்மூவாயிரம் மூன்று மடங்கிற்கும் மேல் பெருகி பத்தாயிரத்தையும் தாண்டிச் சென்றது.

கருத்தரங்கில் தலைமை உரையாற்றிய ம.க.இ.க. மாநில இணைச் செயலாளர் காளியப்பன், ''மொழிப் போர் தியாகிகளின் நினைவு நாளில் விழா நடக்கும் சிறப்பை''த் தொட்டுப் பேசினார். இதையடுத்து ம.க.இ.க. மாநிலச் செயலர் மருதையன் முதன்மை உரையாற்றினார். தமிழ் பல்கலைக் கழகம் - நாடகத் துறையில் பணியாற்றும் பேரா. கு. முருகேசன், ''தமிழ்க் கூத்தின் அடவு வகைகள்'' என்ற தனது உரையில், ''நாட்டுப்புற நடனத்தில் இருந்து திருடி உருவானதுதான் பரத நாட்டியம்'' என அம்பலப்படுத்தினார். உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தில் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றும் வளர்மதி, ''பறையும் தீண்டாமையும்'' எனும் பொருள் குறித்துப் பேசும் பொழுது, ''தமிழனின் முதல் கருவியே பறை தான்; சனாதனம் செய்த சூழ்ச்சியால், பறை சாதிய அடையாளமாக மாறிவிட்டது'' எனக் குறிப்பிட்டார்.

மேலும், 'தொல்காப்பியத்தில் இசைக் குறிப்புகள்'' எனும் தலைப்பில் ப. அருளியும், ''நல்லிசை நிறுத்தல்'' (சுருதி சேர்த்தல்) எனும் பொருளில் பேரா. எஸ்.ஏ. வீரபாண்டியனும், ''தமிழ் இலக்கியங்களில் மண்ணின் இசைப் பதிவுகள் - ஒரு பார்வை'' என்பது பற்றி கே.ஏ. குணசேகரனும், ''ஏட்டிலக்கிய வளர்ச்சியில் நாட்டுப் பாடல்களின் பங்கு'' எனும் பொருள் பற்றி பேரா. அ.மா. சத்திய மூர்த்தியும் உரையாற்றினர்.

கருத்தரங்கத்தின் முடிவில் தமிழிசை அறிஞர் தண்டபாணி தேசிகரின் சீடரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இசைத் துறை பேராசிரியருமான ஜெயராமன், தாமாகவே முன் வந்து தமிழ்ப் பாடல்களைப் பாடினார். 1952-ம் ஆண்டு, தியாகய்யர் உற்சவத்தில் தண்டபாணி தேசிகர் தமிழில் பாடிய பொழுது, பார்ப்பன சாதி வெறியர்கள் மேடைக்குத் தீட்டுக் கழித்து தமிழ் மொழியை அவமதித்தனர். அதன் இரத்த சாட்சியாக இன்றும் வாழ்பவர் ஜெயராமன்.

முன்னிரவில் ஏழு மணிக்குத் தொடங்கிய கலை நிகழ்ச்சிகள், பின்னிரவு இரண்டு மணி வரை நடந்து முடிந்தன. ரெட்டிப்பாளையம் குழுவினரின் - தப்பாட்டம், கும்மியாட்டம், திருச்சி தாராநல்லூர் கலைஞர்களின் சக்கை விளையாட்டு, கோவை மாவட்டக் கலைஞர்களின் ஜிக்காட்டம், மதுரை பகுதி ம.க.இ.க. பெண் கலைஞர்களின் ஒயிலாட்டம், உப்புக் கோட்டை (கம்பம்) குழுவினர் நடத்திக் காட்டிய தேவராட்டம், கே.ஏ. குணசேகரன் குழுவினரின் நாட்டுப் பாடல்கள், பாரதிதாசன் பாடல்கள், ம.க.இ.க. மையக் குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி - என இவையாவும் பார்வையாளர்கள் மத்தியில் உற்சாகத்தையும், எழுச்சியையும் ஏற்படுத்தின.

இந்த ஆடல் - பாடல்களுக்கு இடையே சென்னை - பல்கலை அரங்கத்தின் ''ஏகலைவன்'' நாடகம், விளாத்திகுளம் இராசலெட்சுமி குழுவினரின் ''கண்ணகி கதை'' வில்லுப் பாட்டு, மதுரை - என்.எஸ். வரதராசன் குழுவினரின் அரிச்சந்திரன் - மயான காண்டமும் நடந்தன. மதுரை - கே. சுப்பையா, கே. பாண்டியன் இருவரும் எரிந்த கட்சி எரியாத கட்சி - லாவணிப் பாடல்களையும், மதுரை முருகதாசன் குழுவினர் பாரதிதாசன் பாடல்களையும் பாடினர்.

போராட்டத்தின் வெற்றியைத் தான் விழாவாக கொண்டாடுவது எங்கும் மரபு. ஆனால், காலச் சூழல் காரணமாக விழாவின் வெற்றியைப் போராட்டமாக மாற்றிய ஒரு புதிய மரபினைத் தொடங்கி வைத்துள்ளது, ம.க.இ.க. தமிழ் மக்கள் இசை விழாவின் நிறைவில், ''தமிழில் பாடாவிட்டால் இனி தியாகய்யர் விழாவை அமைதியாக நடத்த விட மாட்

**ரெட்டிப் பாளையம் குழுவினரின் தப்பாட்டம்: தஞ்சையில் ஒலித்த பறை திருவையாறில் ஒலிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை**





படிப்பகம்

www.padippakam.com



"தமிழில் பாடு; இல்லையேல் நாட்டை விட்டு ஓடு!"
தமிழ் மொழி உரிமை காக்க ம.க.இ.க. தோழர்கள் திருவையாறைப் போர்க்களமாக்கினர்

டோம்'' எனச் சூளுரைத்ததை, சனவரி 28-ல் திருவையாறில் நடத்திக் காட்டினர் ம.க.இ.க. தோழர்கள்.

தியாகய்யர் இறந்த நினைவு நாளன்று (திதியில்) கர்நாடக இசைப் பண்டிதர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து "பஞ்சரத் தினக் கீர்த்தனை"களை இசைப்பதுதான் தியாகய்யர் விழாவின் முத்தாய்ப்பான நிகழ்ச்சி. இது சனவரி 28-ந் தேதி நடந்தது. அன்று அரங்கத்தினுள் நுழைந்த ம.க.இ.க. தோழர்கள், குறிப்பிட்ட நேரத்தில் பஞ்சரத் தினக் கீர்த்தனைகளைப் பாடத் தொடங்கு வதைத் தடுத்து நிறுத்தினர். அக்குறிப்பிட்ட நேரத்தில் விசிலை ஊதிக் கொண்டு எழுந்து நின்ற தோழர்கள், "தமிழில் பாடு; இல்லையேல் நாட்டை விட்டு ஓடு'' என முழக்கமிட்டனர். இரகசியமாக எடுத்துச் செல்லப்பட்ட பதாகைகளும், செங்கொடி களும் அரங்கத்தினுள் விரித்துப் பிடிக்கப் பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் இறங்கியவர்களை போலீசார் வலுக்கட்டாயமாக வெளியே இழுத்துச் சென்றபொழுது, அரங்கத்தின் மற்றொரு பகுதியில் இருந்த தோழர்கள் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தனர். அடுத்த டுத்து மூன்று குழுக்களால் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடந்ததால், பார்ப்பன பண்டிதர் கள் பதைபதைத்துப் போயினர்; குடும்ப சகிதமாக வந்திருந்த பார்ப்பன அதிகாரி கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். விழாவை நேரடியாக ஒளிபரப்ப வந்த அரசு தொலைக்காட்சி, ஆர்ப்பாட்டத்தை இருட்டடிப்பு செய்தது. முகம் வியர்த்துப் போய் அரங்கத்தை விட்டு வெளியேறிய மூப்பனார், திரும்பி வரவேயில்லை.

ஆர்ப்பாட்ட செய்தி உடனடியாகவே திருவையாறு எங்கும் பறையடித்து அறி விக்கப்பட்டது. போராட்டத்தின் வெற் றியை. அன்று காலையே தஞ்சை நகரமெங் கும் சுவரொட்டிகள் மூலம் எடுத்துச் சென்ற னர் தோழர்கள். பதைபதைத்துப் போன பார்ப்பனக் கும்பலைத் திருப்தி செய்ய, அரங்கத்தில் ஆர்ப்பாட்டம் செய்த 18 தோழர்களையும், தஞ்சையில் சுவரொட்டி கள் ஒட்டிய மூன்று தோழர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தது தி.மு.க. அரசு. "எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்'' என முழங்கும் தி.மு.க. அரசின் வீரம், இங்கே காணாமற் போனது.

தமிழ் மொழி உரிமை காக்க நடை பெற்ற இப்போராட்டத்தை, "ரகளை'' எனக் கேவலப்படுத்தி செய்தி வெளியிட் டது தினமணி. ஆட்காட்டி நாளேடான தினமலர், "குடமுருட்டி குண்டு வெடிப்பிற் கும், தஞ்சை நினைவுத்தூண் குண்டு வெடிப்புக்கும் ம.க.இ.க. தீவிரவாதிகள்

**திருவையாறில் தியாகய்யர் உற்சவ அரங்கில் ம.க.இ.க.வினர் நடத்திய கலகம், தமிழ் மொழி உரிமை காப்பதற்கானது. அதைச் சாடுபவர்களும், வாய்மூடி மௌனித்து இருப்பவர்களும் தமிழுக்கும், தமிழருக்கும் எதிரானவர்கள்தான்.**

தான் காரணம்'' என்று அவதூறு செய்து, "இவ்வமைப்பைத் தடை செய்ய வேண் டும்'' என அரற்றியுள்ளது. பம்பாயில் இருந்து வெளிவரும் "டைம்ஸ் ஆஃப் இந் தியா'' என்ற ஆங்கில நாளேடு, "தமிழ் மொழி வெறியர்களின் போராட்டம்'' என உருமியுள்ளது. வலதுகளின் ஜனசக்தி, "திருவையாறில் தெலுங்கில் பாடுவது தமி ழர்களின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு எடுத்துக்காட்டு'' எனப் பார்ப்பன மொழி யில் வாந்தியெடுத்தது.

தமிழ்மொழி பற்றி பீற்றிக் கொள்ளும் பார்ப்பனர் அல்லாத நாளேடுகளும், போராட்டத்தை வசை மாரி பொழிந்தே செய்திகளை வெளியிட்டுள்ளன. 'தமிழர் தந்தை' என அடைமொழி கொடுத்து அழைக்கப்படும் ஆதித்தனார் குடும்பத் துக்குச் சொந்தமான தினத்தந்தி, போராளி களை ரவுடிகளைப் போல் சித்தரித்து, 'அவன்; இவன்' எனக் குறிப்பிட்டு அவம தித்தது; ஆர்ப்பாட்டத்தை ரவுடிகளின் கல கமாக அவதூறு செய்துள்ளது. பார்ப்பன ஏடுகள் தமிழரின் எதிரிகள் எனில், பார்ப்ப னர் அல்லாத ஏடுகள் தமிழினத் துரோகிக ளாக அடையாளங் காட்டிக் கொண்டன.

சொத்து, பதவி சுகம், சுயநலத்திற்கா கவே தமிழினக் காவலர்களாகக் காட்டிக் கொள்ளும் வீரமணி, இராமதாசு இன்னும் இவர்கள் போல ஓட்டுக் கட்சிப் பிரமுகர் கள் பலரும் இப்போராட்டம் பற்றி வாய் மூடி மௌனம் சாதிக்கின்றனர். இதை "இராஜ தந்திர மௌனம்'' என அவர்கள் பீற்றிக் கொள்ளலாம். ஆனால் இந்த மௌ னம் போராளிகளின் புறமுதுகில் குத்தும் ஈனச் செயலாகும்.

• முத்து.



படிப்பகம்

www.padippakam.com



## வங்கதேசத்தை உலுக்கிய சிறைக் கலகம்

இந்தியாவின் அண்டை நாடான வங்கதேசத்தில் கடந்த டிசம்பர் மாத இறுதியில் நடந்த வரலாறு காணாத மாபெரும் சிறைக் கிளர்ச்சி, அந்நாட்டின் போலி ஜனநாயகத்தை மீண்டும் அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது. வங்கதேசத்தின் வெள்ளிவிழா 'சுதந்திர' நாளையொட்டி, சிறையில் வாடும் பல்லாயிரக்கணக் கான கைதிகளில் 90 பேருக்கு மட்டும் பொது மன்னிப்பு அளித்து ஷேக் ஹசீனா அரசு விடுதலை செய்தது. இப்படி பாரபட்சமாக ஒரு சிலரை மட்டும் விடுதலை செய்வதை எதிர்த்தும், பல்லாண்டு களாக விசாரணையின்றி சிறையில் வாடும் தங்களையும் விடு தலை செய்யக் கோரியும், சிறைகளில் உணவு - சுகாதார - மருத் துவ வசதிகளைக் கோரியும், சிறைகளில் தொடரும் மிருகத்தன மான அடக்குமுறையை எதிர்த்தும் வங்கதேசத் தின் தென்மேற்கேயுள்ள ஜெஸ்ஸோர் சிறையி லுள்ள 2700-க்கும் மேற் பட்ட கைதிகள் கடந்த டிசம்பர் 16-ந் தேதியிலி ருந்து கிளர்ச்சியில் இறங் கினர். சிறைக் காவலர் களை அடித்து விரட்டி விட்டு சிறை நிர்வாகத் தையும் அவர்கள் கைப் பற்றிக் கொண்டனர். இதைத் தொடர்ந்து டாக்கா மத்திய சிறை உள்ளிட்டு நான்கு மத் திய சிறைகளில் கலகம் பரவி, அச்சிறைகளை யும் கைதிகளே கைப்பற் றிக் கொண்டனர்.

ஒரு வார காலத் திற்கு நடந்த இக்கிளர்ச்சி யால் நிலை குலைந்து போன ஹசீனா அரசு, சமரசப் பேச்சு வார்த்தை நடத்துவதாகக் கூறிக் கொண்டு பல்லாயிரக்கணக்கான போலீசு - துணை ராணுவப் படைகளைக் குவித்து தாக்குதலைக் கட்டவிழ்த் துவிட்டது. இக்காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை எதிர்த்து சிறைக் கைதிகள் வில் - அம்புகள், மண்வெட்டி, கடப்பாரைக ளைக் கொண்டும், போர்வைகளைப் பந்தாகச் சுருட்டி தீப்பந்த மாக்கி எறிந்தும், தீரத்துடன் போராடினர். ஆயினும் துப்பாக்கிச் சூடு நடத்தியும், புல்டோசர்களை வைத்து சிறைக் கதவுகளை இடித்தும் கண்மூடித்தனமான அடக்குமுறையை ஏவிய போலீசு 10 பேரைக் கொன்றும், 400-க்கும் மேற்பட்டோரை படுகாயப்ப டுத்தியும் இப்போராட்டத்தை ஒடுக்கியுள்ளது. சிறைக் கைதிகளின் நியாயமான போராட்டத்தை ஆதரித்தும், சிறைச்சாலைகளைக் கொலைக்களமாக்கிய ஹசீனா அரசைக் கண்டித்தும் எதிர்க்கட்சி கள் நாடுதழுவிய கடையடைப்புப் போராட்டத்தை நடத்தின. அம்பலப்பட்டுப் போயுள்ள ஹசீனா அரசு, சிறைக் கலவரம் பற்றி விசாரணைக் கமிஷன் அமைத்து ஜனநாயக நாடகமாடி வருகிறது.

## "காட்"டாட்சிக்கு எதிராக தொழிலாளர்களின் போர்

கடந்த டிசம்பர் மாத இறுதியிலிருந்து தென் கொரியாவில் தொழிலாளர்கள் நடத்திவரும் வேலைநிறுத்தப் போராட்டம் அந் நாட்டையே உலுக்கி வருகிறது. துறைமுகம், கார் உற்பத்தி, இரசா யன, சுரங்க, உலோக ஆலைகள், ரயில்வே என அனைத்து தொழிலாளர்களும் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத் தில் இறங்கியுள்ளனர். வங்கித் துறை, அரசுத் துறை, அத்தியாவசி யப் பணித் துறை ஊழியர்கள், தொழிலாளர்களின் போராட்டத் துக்கு தார்மீக ஆதரவளித்துள்ளனர். மாணவர் சங்கங்கள் தொழி லாளர்களோடு சேர்ந்து போராட்டத்தில் குதித்துள்ளன.

உலகின் 6-வது மிகப்பெரிய கார் உற்பத்தித் தொழிற்சாலை யைக் கொண்டுள்ள தென்கொரியாவில், தொழிலாளர் போராட் டங்களால் பொருளாதார இழப்புகள் ஏற்பட்டுள்ளதாகக் கூறிக் கொண்டு அதிபர் கிம் -யாங் - சாம் புதியதொரு கருப்புச் சட் டத்தை கடந்த டிசம்பர் இறுதியில் கொண்டு வந்துள்ளார். நாடாளு மன்றத்தில் இதற்கான மசோதாவை முன்வைத்து விவாதிக்காமல், ஆளும் கட்சி எம்.பி.க்களின் ஆதரவுடன் கொல்லைப்புற வழி யாக அவசர அவசரமாக இக்கருப்பு மசோதா சட்டமாக்கப்பட் டது. இப்புதிய கருப்புச் சட்டப்படி, எந்தவொரு கொரிய முதலாளியும், போராடும் தொழிலா ளியை தன்னிச்சையாக வேலை நீக்கம் செய்ய லாம்; எந்த நேரத்திலும் ஆலைகளில் கதவடைப் பினை அறிவிக்கலாம்; தொழிலாளியின் வேலை நேரத்தை அதிக ரிக்கலாம்; ஒரு நிறுவ னத்தில் ஒரேயொரு தொழிற்சங்கம் மட்டுமே செயல்பட அனுமதிக்கப் படும். இதுதவிர, போரா ளிகளைக் கண்டறிந்து களையெடுக்கும் நோக் கத்துடன் ரகசிய போலீசு மற்றும் உளவு நிறுவனங் களுக்கு வரம்பற்ற அதி காரமளிக்கும் சர்வாதி காரச் சட்டங்களும் அவ சரமாக நிறைவேற்றப் பட்டுள்ளன.



நாடாளுமன்றக் கட்டிடம் அருகே கருப்புச் சட்டங்களை எதிர்த்து தென் கொரி யத் தொழிலாளர்களும் மாணவர்களும் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

முந்தைய இராணுவ சர்வாதிகார ஆட்சியை ஒத்த இந்தக் கருப்புச் சட்டங்களை எதிர்த்து தென்கொரியத் தொழிலாளர்கள் புத்தாண்டு தினத்தில் 3,50,000 பேருக்கு மேலாகத் திரண்டு தலை நகர் சியோலில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தி னர். போலீசார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் தடியடி நடத்தியும் தொழிலாளர்களை ஒடுக்கிய போதிலும் போராட்டம் தொடர்ந்து நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது. தென்கொரியத் தொழிலாளர் போராட்டம் அந்நாட்டின் தனிப்பட்ட விவகார மல்ல. தனியார் மயம் - தாராள மயம் - உலக மயம் எனும் காட் - டங்கல் ஒப்பந்தத்தின் எதிர்விளைவுதான் அது!

டங்கல் திட்ட வெற்றிக்கு ஏகாதிபத்தியங்கள் எந்த நாட்டை முன்னுதாரணம் காட்டினார்களோ, அந்த நாடே அதன் எதிர் விளைவுகளுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்து வருகிறது.

## புதைகுழியை நோக்கி புரட்சிப் பயணம்

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, போராட்டப் பாதையைக் கைவிட்டு ஆக்கபூர்வமான பாதையில் பயணம் செய் யப் போவதாக வலது கம்யூனிஸ்ட் கட்சி அண்மையில் அறிவித் துள்ளது. "இந்தியாவில் காங்கிரசுக்கு அடுத்தபடியாக தொன்மை வாய்ந்த கட்சி; 71 ஆண்டு காலமாக நீடித்து வரும் கட்சி என்ற



படிப்பகம்

www.padippakam.com



பெருமை இருப்பினும், எதிர்ப்பு கலாச்சாரத்தில் வளர்ந்த கட்சி என்ற அவப்பெயரும் நீடிக்கவே செய்கிறது. எனவே கட்சியின் செயல்பாட்டை போராட்டப் பாதையிலிருந்து ஆக்கபூர்வ பாதைக்கு மாற்ற விரும்புகிறேன்'' என்று திருவாய் மலர்ந்துள்ளார் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான பரதன்.

''கட்சி ஊழியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் - பேரணிகள் நடத்துவதில்தான் அக்கறை காட்டுகிறார்கள். உண்மையில் இது கட்சியின் செயல்பாட்டை வரம்பிட்டுக் கொள்வதாக அமைந்து விடுகிறது. இப்போராட்டங்களுக்குப் பிறகு எதுவும் செய்யாமல் கட்சியானது முடங்கி விடுகிறது. இதை உணர்ந்து கட்சியின் வேலைமுறையில் மாற்றம் கொண்டுவர விரும்புகிறோம். வெறும் எதிர்ப்புப் போராட்டங்கள் மக்களிடம் சலிப்பையே ஏற்படுத்துகிறது. இதனால் கட்சி வளர்ச்சி தேக்கமடைந்து விடுகிறது'' என்று தனது சந்தர்ப்பவாதத்துக்கு விளக்கமளிக்கிறார் அவர்.

''அரசு திட்டங்களை நிறைவேற்றப் பாடுபடும் போது மக்கள் மேலும் நெருங்கி வந்து ஐக்கியப்படுகிறார்கள். ஆனால் போராட்டங்களை முன்னெடுக்கும் போது மக்கள் இவ்வாறு கட்சியிடம் நெருங்கி வருவதில்லை'' என்று இத்துரோகக் கொள்கைக்கு சுருதி சேர்க்கிறார், வலதுகளின் மத்தியக் கமிட்டி செயற்குழு உறுப்பினரான எல்ல மண்ட்ல ரெட்டி. ''மத்திய அரசில் கட்சியின் விவசாய மந்திரி உள்ளார். விவசாயத் துறையில் 101 அரசு நலத் திட்டங்கள் உள்ளன. இத் திட்டங்களை நிறைவேற்ற கட்சி ஊழியர்கள் செயல்படுவதன் மூலம் விவசாயிகளைத் திரட்ட சாதகமான நிலைமை உள்ளது'' என்று அரசு சலுகைகள் - சன்மானங்களைப் பொறுக்கித் தின்பதற்கு கட்சி ஊழியர்களுக்கு அறைகூவல் விடுக்கிறார்.



சௌதி அரேபியாவில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த ஊனமுற்ற ஏழை இந்தியச் சிறுமிகள். (பம்பாய் விமானநிலையத்தில் இறங்கியபொழுது)

இந்தியாவில் எந்தவொரு பிழைப்புவாத முதலாளித்துவ கட்சிகூட போராட்டமே வேண்டாம் என்ற அபத்தமான முடிவுக்கு வருவதற்கு தயங்குகின்றன. ஆனால் வலதுகளோ நாற்காலி சுகம் காண்பதையே லட்சியமாகக் கொண்டுள்ளது போதாதென்று, புரட்சி - போராட்டம் - தியாகம் என்ற வாடையே இல்லாமல் அப்பட்டமான முதலாளித்துவக் கட்சியாக மாறி ஆளும் வர்க்கங்களுக்கு விசுவாச சேவை செய்யக் கிளம்பி விட்டார்கள்.

## இனியும் தொடருமோ இந்தக் கொடுமை?

''இன்ஷா அல்லாஹ்!'' - முஸ்லீம்களின் புனிதத் தலமான மெக்காவுக்கு அருகிலுள்ள ஜெட்டா நகர வீதியில் கொளுத்தும் வெயிலில் அச்சிறுமி பிச்சை எடுத்துக் கொண்டிருந்தாள். கடந்த ஆண்டு ''உம்ரா'' யாத்திரை மேற்கொண்டு ஆண்டவன் அருள் பாலிப்பார் என்று நம்பித்தான் அவள் இங்கு வந்தாள். ஆனால் அவளோ காஃபிர்; உடல் ஊனமுற்ற ஏழை இந்தியச் சிறுமி. அந்நிய நாட்டில் வந்து இப்படி பிச்சை எடுக்கப் போகிறோம் என்று அவள் கனவிலும் நினைத்ததில்லை. ஜெட்டாவுக்கு அழைத்து வந்து, இங்கே பிச்சை எடுக்கும்படி சித்திரவதை செய்யும் குண்டர்களை நினைக்கும் போதே அவள் உடல் நடுங்குகிறது.

அடுத்த தெருவில் இன்னும் பல இந்தியச் சிறுமிகள் பிச்சையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிலே ஒரு குழந்தை பிறவியிலேயே செவிடு - ஊமை. குண்டர்களின் கொடூர சித்திரவதையால், கையில் தட்டுடன் ''பே பே'' என்று கத்துவதைத் தவிர அவளுக்கு வேறொன்றும் தெரியவில்லை. புனித யாத்திரைக்கு வருபவர்களின் கவனம் இக்குழந்தைகளின் மீது திரும்ப வேண்டும் என்பதற்காக, சில குழந்தைகளின் முகங்கள் தீயினால் சுட்டுக் கோரமாக்கப்பட்டுள்ளன.

மெக்கா - ஜெட்டா; இன்று அது முஸ்லீம்களின் புனிதத் தலமல்ல, காஃபிர்களின் உலகம். ஒவ்வொரு தெருவுக்கும் ஒரு ரௌடி பொறுப்பு. அவனது கட்டுப்பாட்டின் கீழ் பிச்சை எடுக்கும் இளம் குழந்தைகள் என்று சௌதி அரேபியா மாறி விட்டது.

கடந்த ஜனவரி மத்தியில் சௌதி அரேபிய அரசு, ஜெட்டா நகரில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த 76 சிறுமிகளைப் பிடித்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பியுள்ளது. இவர்கள் அனைவரும் 4 முதல் 14 வயதுக்குட்பட்டவர்கள். போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மே. வங்கத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இம்மாவட்டம், பிச்சை எடுக்க குழந்தைகளைக் கடத்தும் மாஃபியா கும்பலின் சொர்க்கபுரியாக உள்ளது. வறுமையில் வாடும் இப்பகுதி மக்கள், ஊனமுற்ற தங்கள் குழந்தைகளைப் பராமரிக்க முடியாத நிலையில், மனதைக் கல்லாக்கிக் கொண்டு விற்கவும் செய்கின்றனர். சிலர், மாஃபியா குண்டர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி, ஊனமுற்ற குழந்தைகளுடன் மெக்காவுக்கு புனிதப் பயணமாக வந்த பிறகு, குண்டர்களின் கட்டுப்பாட்டில் பிச்சை எடுக்குமாறு சித்திரவதை செய்யப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ''ஹஜ்'' யாத்திரையின் போது இத்தகைய கொடூரங்கள் தொடரவே செய்கின்றன.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு வரை, அரபு ஷேக்குகளின் உல்லாச கேளிக்கைக்காக நடத்தப்படும் ஒட்டகப் பந்தயங்களில், ஒட்டகத்தின் முதுகில் கட்டப்படும் குழந்தைகளின் அலறலைக் கேட்டு ஒட்டகங்கள் வேகமாக ஓடும் என்பதற்காக இந்தியக் குழந்தைகள் மாஃபியா குண்டர்களால் கடத்திச் செல்லப்பட்டனர். இக்கொடுஞ்செயலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள அதே சமயம், பிச்சை எடுக்க குழந்தைகளைக் கடத்திச் செல்லும் தொழில் இன்னமும் கொடி கட்டிப் பறந்து கொண்டுதான் இருக்கிறது.

உடல் ஊனமுற்றோர் ஆண்டு, குழந்தைகள் நல ஆண்டு என்று கோலாகலமாகக் கொண்டாடி, அவர்களின் நலனுக்காக அரும்பாடுபட்டு முன்னேற்றி விட்டதாக ஆட்சியாளர்கள் பீற்றிக் கொள்கிறார்கள். ஆனால் அது எவ்வளவு பெரிய மோசடி என்பதை ஜெட்டா சம்பவம் மீண்டும் திரைகிழித்துக் காட்டி விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி பதில்



**உங்களைப் பற்றி சிலர், "இவர்கள் மற்றவர்களின் குறை காணவே பத்திரிக்கை நடத்துகின்றனர், ஆனால் இவர்களின் குறைகளைத் திரும்பிப் பார்க்க மாட்டார்கள், மற்றவர்களின் குறைகளைக் கூறியே அரசியல் நடத்துபவர்கள்" என்கின்றனர். இவ்விசயத்தில் புதிய ஜனநாயகத்தின் கருத்தும் பதிலும் என்ன? -இராவணன், நெய்வேலி.**

"புதிய ஜனநாயகம்" - வியாபாரத்துக்காக நடத்தப்படும் பத்திரிக்கை அல்ல; பிற அமைப்புகளுடன் சமரசமான கருத்துக்களை எழுதி, அதன் அணிகளிடம் எப்படியாவது விற்பனையைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணமும் கிடையாது. புதிய ஜனநாயகப் புரட்சி என்கிற அரசியல் இலட்சியத்திற்காக அணிகளையும், மக்களையும் திரட்டும் நோக்கத்திற்காக நடத்தப்படுகிறது. இதற்கு மாறான, எதிரான பல்வேறு போக்குகளை எதிர்த்துப் போராடியும், அம்பலப்படுத்தியும் தான் இந்தப் பணியை நிறைவேற்ற முடியும். இந்த அமைப்பின் அரசியல், சித்தாந்த நிலைப்பாடுகள், நடவடிக்கைகள் மீதான விமர்சனங்களை வெறுமனே ஒதுக்கித் தள்ளாது, வாதப் பிரதிவாதங்கள் நடத்தி வந்திருக்கிறோம். இங்கே வேறு எந்தப் புரட்சிகர அமைப்பிலும் இல்லாத அளவுக்கு சனநாயகப் பூர்வமாக உள் அமைப்பு விவாதங்களையும், விமர்சன, சுயவிமர்சனங்களையும் நடத்தியும் வருகிறோம். புரட்சிகர இலட்சியத்தை நோக்கமாகக் கொண்ட எந்தவொரு அமைப்பும் இயங்கும் முறை இதுதான்.

நமது அரசியல், சித்தாந்த நிலைப்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் மீது நேரடியான, குறிப்பான விமர்சனங்கள் எதுவும் வைக்க இயலாதவர்கள், நமது விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் திராணியற்றவர்கள்தான் வாசகர் சுட்டிக்காட்டும் அவதூறுகளைச் செய்கின்றனர். நடைமுறைக்கான அரசியல், சித்தாந்த முடிவு எதுவும் எடுக்காமல், வெறும் தத்துவ விசாரணையில் மட்டும் ஈடுபட்டுள்ள பேராசிரியர்களும், அறிஞர்களும், அவர்களின் சீடர்களும், "இது விவாதத்திற்காக முன்வைக்கப்படுவதுதான்; முடிந்த முடிவானது அல்ல; மாறுதலுக்குள்ளாகக் கூடியதுதான்" என்கிற பீடிகையில்லாமல் "தமது கருத்து"க்களை முன்வைப்பதில்லை. இது அவர்களின் தன்னடக்கத்தையும், தவறுகளை ஏற்கும் தாராள மனத்தையும், ஜனநாயக உணர்வையும் காட்டுவதான நடிப்புதான். "எல்லாவற்றிலும் தவறும் இருக்கிறது; எல்லாவற்றிலும் சரியும் இருக்கிறது" என்ற அனைத்தும் தழுவிய உண்மையை அவர்கள் பயன்படுத்துவதே "எதையும் நம்பாதே; எந்த இயக்கத்திலும் இணைந்து செயலுக்குப் போகாதே" என்கிற சீர்குலைவு வேலைக்குத்தான். மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்தை உழைக்கும் மக்கள் பற்றிப் போராடுவதைத் தடுக்கும்முகமாக, அதற்கு மாற்றான, இணையான "முற்போக்கு" சித்தாந்த வகைகளை உருவாக்குவதை ஏகாதிபத்திய அறிவுஜீவிகள் செய்கின்றனர். இதற்காகவே அவர்களும், அவர்களின் கீழை நாட்டுப் பிரதிநிதிகளும் "எல்லா சித்தாந்த, அரசியல் நடவடிக்கைகளிலும் சரியும் உண்டு, தவறும் உண்டு" என்று பொதுமைப்படுத்தி, அப்புறம், நெடுமாறன், கிருஷ்ணய்யர், இராமதாசு என்று அடுத்தடுத்து ஒருவரை முன்னிறுத்தி இயக்கத்தை வளர்ப்பதையே வழிமுறையாகக் கொண்டவர்களும், தமது சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்த "மாற்றான் தோட்டத்து மல்லிகையிலும் மணமுண்டு" என்று சாதிக்கின்றனர்.

**இந்தியாவில் பல கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளன. அவற்றுள் சில பாராளுமன்ற அரசியலை நம்புகின்றன (சி.பி.ஐ., சி.பி.எம்., கசி). நீங்கள் (ம.க.இ.க.) ஆயுதந் தாங்கிய பாதையில் புதிய ஜனநாயகப் புரட்சி செய்வோம் என்கிறீர்கள். வேறு சிலர் (தமிழரசன் குழு) குண்டு அரசியல் நடத்துகின்றனர். இப்படி கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள் பல முரண்பாடுகள் இருக்கும்போது, இந்தியாவில் புரட்சி சாத்தியப்படுமா? -இராவணன், நெய்வேலி.**

அரசியல், சித்தாந்த ரீதியில் பிளவுபடாத, ஐக்கியப்பட்ட தலைமையின்கீழ் புரட்சிகர சக்திகள் அணிதிரண்டிருப்பது புரட்சியின் சாத்தியப்பாட்டிற்கு அவசியமான முன்தேவைகளில் ஒன்று என்பது சரியே! ஆனால் இந்த ஐக்கியத்தையும் அணிதிரட்டலையும் கட்சிகள், குழுக்களின் தலைவர்களிடையே பேச்சுவார்த்தைகள் நடத்தி, ஒரு சமரசத்திற்கு வந்து சாதிக்க முடியாது. அப்படி ஏதாவது ஒப்பந்தம் ஏற்பட்டாலும், அது விரைவிலேயே தகர்ந்து போவதையே அனுபவங்கள் காட்டுகின்றன. மாறாக, சரியான திட்டம், போர் தந்திரம், செயல் தந்திரம், நடைமுறை இயக்கத்துக்கான அரசியல் - சித்தாந்தப் போராட்டங்கள் மூலமாகத்தான் ஐக்கியத்தை அடைய முடியும். இவற்றில் வெவ்வேறு நிலைப்பாடுடையவர்கள் தனித்தனி அணியாக (கட்சிகளாகவும், குழுக்களாகவும்) நின்று போராடுவது வரலாற்றில் ஒன்றும் புதிதல்ல; இயல்பானதுதான். ஒரே கட்சிக்குள்ளும், குழுவுக்குள்ளும்கூட இத்தகைய போராட்டங்கள் தவிர்க்க முடியாததாக, அவசியமாகிவிடுவதும் உண்டு. ஆனால் இவை கோட்பாடற்றவையாகவோ, தனி மனிதக் குழுவாத அடிப்படையிலோ இருக்கக் கூடாது. அதே சமயம், தமது சொந்த நிலைப்பாடுகளுக்கே விசுவாசமாக இல்லாமல், நடைமுறை இயக்கத்தோடு தொடர்பே இல்லாமல், வறட்டுத்தனமான - வகுப்பறை வாதப் பிரதிவாத நோக்கத்தோடும், முடிவற்ற முறையில் சரியான அரசியல் - சித்தாந்த நிலைப்பாடுகளைத் தேடுவதையும், பல்வேறு மாற்றுகளை அலசுவதையையும் மட்டுமே குறிக்கோளாகவும் கொள்வதில் பொருளில்லை.

ஆகவே, அரசியல் - சித்தாந்த வேறுபாடுகள் காரணமாக கம்யூனிஸ்டுகள் வெவ்வேறு கட்சிகளாகவும், குழுக்களாகவும் தனித்தனி அணிகளாகப் பிளவுபட்டு நின்றாலும், புரட்சியின் வளர்ச்சிப் போக்கில் சரியான நிலைப்பாடுகளை முன்வைத்துப் போராடும் தலைமையின்கீழ் ஐக்கியமும், புரட்சிகர சக்திகள் அணிதிரளுவதும் ஈடேறும் என்பதால், இப்போது அதிருப்தியோ, அவநம்பிக்கையோ கொள்ளத் தேவையில்லை. அத்தகைய ஐக்கியம் என்பதுகூட அடிப்படை நிலைப்பாடுகளில் ஒன்றுபட்டிருக்கும் அமைப்புகளுக்கிடையேதான் எட்டப்படும். ஆனால் இங்கே வாசகர் குறிப்பிட்டிருக்கும் அமைப்புகள் எல்லாம் அடிப்படை நிலைப்பாடுகளில் ஒன்றுபட்டிருப்பவை அல்ல. பாராளுமன்ற அரசியலுக்கும், குண்டு அரசியலுக்கும் சொந்தக்கார கட்சிகளும் - குழுக்களும், புதிய ஜனநாயகப் புரட்சிக்காகப் போராடும் கட்சிகளும் குழுக்களும் அடிப்படையில் வேறுவேறான நிலைப்பாடுகளைக் கொண்டவை. மூன்றாவது வகையினர் மார்க்சிய - லெனினியத்தில் ஊன்றிநின்று போராடிவரும் அதேசமயம், முதலிரண்டு வகையினர் குட்டி



படிப்பகம்

www.padippakam.com

முதலாளிய வர்க்க சிந்தனை காரணமாக மார்க்சிய - லெனினியத்தில் இருந்து விலகி, சமரச, சரணடைவுப் பாதையிலும், தீவிரவாத சாகசப் பாதையிலும் சீரழிந்து போனவர்கள். இந்த இருவகையினரோடு ஐக்கியப்படுவதற்கு மாறாக, இவர்களை அரசியல் - சித்தாந்த ரீதியில் முறியடிப்பதன் மூலமே ஐக்கியப்பட்ட புரட்சிகரத் தலைமை உருவாகும்.

> *ஜெயின் கமிஷன் விசாரணையில் "விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பாட்டாளி மக்கள் கட்சி தவிர மக்கள் கலை இலக்கியக் கழகம் என்ற அமைப்பை எங்கள் ஆட்சியில் ஒடுக்கினோம்" என்று ஜெயலலிதா கூறியதாக நாளிதழ்களில் பார்த்தேன். இது உண்மையில் தமிழ்நாட்டு புலி ஆதரவாளர்களுக்கு வெட்ககரமானதாக இருக்காதா? நெடுமாறன் போன்றவர்களை மறைப்பதற்காக ஜெயலலிதா கூறினாரா அல்லது வேறு எதற்காக?*
>
> - தங்கதுரை, சென்னை.

நெடுமாறன், வீரமணி போன்று வெளிப்படையாகவே புலிகளின் பினாமிகளாகவும், ஆதரவாளர்களாகவும் இயங்கும் அமைப்புகள் பற்றி ஐந்தாண்டுகள் தமிழ்நாட்டு முதலமைச்சராகவும், போலீசு மந்திரியாகவும் இருந்த ஜெயலலிதாவுக்கு நன்றாகவே தெரியும். அவை தவிர பயத்தினாலோ, அவசியத்தினாலோ இரகசியமாக இயங்குபவை பற்றியும் அவருக்குத் தெரியும். இருந்தாலும் பா.ம.க. மற்றும் ம.க.இ.க. ஆகிய இரண்டு அமைப்புகளுக்கு எதிராக மட்டும் ஜெயின் கமிசனில் ஜெயலலிதா சாட்சியமளித்துள்ளதற்குக் காரணங்கள் இல்லாமலில்லை. ராஜீவ் காந்தி கொலையைத் தொடர்ந்து வந்த நாட்களில் பிற அமைப்புகள் பெரும்பாலும் செயலிழந்துபோன நிலையில், ம.க.இ.க. மட்டும் ஈழ ஆதரவு நிலையில் ஊசலாட்டமின்றி உறுதியுடன் நின்றது. என்.எஸ்.ஏ., தடா, அரசு துரோகச் சட்டங்களை ஏவி, ம.க.இ.க. மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட போலீசு - உளவுத் துறையின் அறிக்கைகளில் தவறாது நமது பார்ப்பன - பாசிச எதிர்ப்பு அரசியல் முக்கியக் குற்றமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அன்றிலிருந்து, கடைசியாக வினோதகன் மருத்துவமனையைக் கைப்பற்றும் போராட்டம்வரை நமது உறுதியும், செயல்பாடுகளும் ம.க.இ.க.வைத் தனது எதிரியாக ஜெயலலிதா கும்பல் கருதுவதற்குக் காரணமாக அமைந்தன.

பா.ம.க. பிரமுகர்களில் சிலர் புலி ஆதரவு நிலையை எதிர்ப்பவர்களாக இருந்தாலும், அதன் தலைமையிடம் ஊசலாட்டம் இருந்தாலும், அதன் அணிகளிடம் கணிசமான அளவு புலி ஆதரவு நிலை உள்ளது. மேலும் பிற அமைப்புகளின் புலி ஆதரவு நிலையை வெளிப்படுத்துவதற்கான ஓர் அங்கமாக பா.ம.க.வே பயன்படுகிறது. பா.ம.க.-வின் ஓட்டுச் சீட்டு அரசியலும் எப்போதும் ஜெயா கும்பலுக்கு எதிரானதாகவே இருந்து வருகிறது. இதையெல்லாம் மனதில் வைத்துத்தான் ஜெயலலிதா ஜெயின் கமிசனிடம் அப்படிச் சாட்சியம் அளித்தார்.

இது ஒன்றும் புலி ஆதரவாளர்களுக்கு வெட்ககரமானதாக இருக்காது. அவர்களைப் பொருத்தவரை சட்டத்தின் பிடியில் சிக்காமலும் இருக்க வேண்டும்; புலிகளின் ஆதரவாளர்கள் என்கிற விசுவாசத்தையும் காட்ட வேண்டும் - இந்தச் செயல்தந்திரத்துக்கு ஏற்ற வகையில்தான் ஜெயாவின் சாட்சியத்தைப் பார்ப்பார்கள். அதனால்தான் புலிகளின் அணிகளையும், பிற ஈழத் தமிழர்களையும் ஜெயா அரசு நரவேட்டையாடிய காலத்தில் புலிகளின் பினாமிகளும், ஆதரவாளர்களும் அடக்கி வாசித்தனர். அடுத்து உயிருக்குப் பாதுகாப்புத் தேடி ஜெயா புலிகளுடன் சமரசம் செய்துகொள்ளும் முகமாக நெடுமாறன், வீரமணி போன்றவர்களை வளைத்துப் போட்டுக் கொண்டார். அப்புறம்தான் தெம்பு வந்து இவர்களும் தமது சவடால்களை ஆரம்பித்தனர்.

## பாலியல் வன்முறைக் கொலைகாரர்களுக்குத் துணைபோன புலிவலம் போலீசு!

முசிறி வட்டத்திலுள்ள தேவர்புரம் கிராமத்தைச் சேர்ந்தவர் செல்லம்மாள். இவரது கணவர் பெயர் தங்கவேல். செல்லம்மாள் சென்ற வருட தீபாவளிக்கு முதல் நாள் இரவில் தனது வீட்டிலேயே சந்தேகத்திற்கிடமான முறையில் இறந்து போனார். அவரது உடலின் பல இடங்களில் இரத்தக் காயங்கள் இருந்தன.

செல்லம்மாவின் கணவர் தங்கவேல், மனைவியை வரதட்சனை கேட்டு துன்புறுத்தி, பலமுறை தாய் வீட்டிற்குத் துரத்தியடித்தவன். அவனது அண்ணன் பிச்சைமுத்து, செல்லம்மாவைத் தனது காம இச்சைக்குப் பணிந்து போகும்படித் தொடர்ந்து மிரட்டி வந்துள்ளான். இவையும், செல்லம்மாள் இறந்து கிடந்த நிலையும், அவரது பெற்றோர்களுக்கு ஐயத்தை ஏற்படுத்தின.

செல்லம்மாவின் பெற்றோர் சந்தேகப்படுவதைப் புரிந்து கொண்ட தங்கவேலு - பிச்சைமுத்து கும்பல், செல்லம்மாவின் பெற்றோரையும், சகோதரர்களையும் அடித்துக் கட்டிப்போட முயன்றனர். ஆனாலும் செல்லம்மாவின் தம்பி தப்பி ஓடிச் சென்று புலிவலம் போலீசு நிலையத்தில் கொடுத்த புகாரை அங்கிருந்த இரு போலீசார் வாங்க மறுத்ததோடு, அவரைத் துரத்தியடித்து விட்டனர்.

எனினும், செல்லம்மாவின் பெற்றோர் மனம் தளர்ந்துவிடாது, தங்கள் கிராமத்து (அம்மாபட்டி) மக்களைத் திரட்டி, மூவலூர் கிராம நிர்வாக அதிகாரியிடம் புகார் செய்தனர். இதன் பின் தான், செல்லம்மாவின் உடல் பிரேத பரிசோதனைக்காக



காமுகர்களைக் கைது செய்யக் கோரி நடந்த ஆர்ப்பாட்டம்

துறையூருக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆனாலும், பரிசோதனை அறிக்கை பற்றிய விவரங்களை வெளியே சொல்லவோ, குற்றவாளிகளைக் கைது செய்யவோ புலிவலம் போலீசார் மறுத்து வருகின்றனர்.

இந்நிலையில் அப்பகுதியில் இயங்கி வரும் விவசாயிகள் விடுதலை முன்னணியினர் கொலையாளிகளைத் தண்டிக்கவும், அவர்களுக்குத் துணைபோகும் போலீசார் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரி, துறையூர் தாலுகா அலுவலகம் முன்பு 22.11.96 அன்று காலை தொடங்கி மாலைவரை தொடர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதன்பின் செல்லம்மாவின் மரணம் பற்றி ஒப்புக்காக விசாரணை நடத்திய மாவட்ட வருவாய் அதிகாரி விஜயகுமார், அமைப்பு ரீதியாகச் சென்ற தோழர்களையும், வழக்குரைஞரையும் புறக்கணித்துவிட்டு, இறந்துபோன செல்லம்மாவின் ஐந்து நெருங்கிய உறவினர்களிடம் மட்டும் வாக்குமூலம் பெற்று அனுப்பி விட்டார். இதைத் தொடர்ந்து, செல்லம்மாவின் மரணம் குறித்து நீதி விசாரணை கோரி வி.வி.மு. சார்பாக கையெழுத்து இயக்கம் நடத்தப் பெற்று, அம்மனு தலைமை நீதிபதி உள்ளிட்ட பதினொரு உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் குற்றவாளிகளைத் தண்டிக்க, அரசு தரப்பில் இருந்து எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தகவல்: வி.வி.மு., காளிப்பட்டி.



படிப்பகம்

www.padippakam.com

## காங்கிரசு வழியில் ஐக்கிய முன்னணி

# தாராளமயமாக்கலும் தீராத நெருக்கடியும்

தாராளமயமாக்கலின் பின் இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் தான் சென்று கொண்டிருக்கிறது என்பதை மக்கள் மத்தியில் எடுத்துக் கூறுவதற்கு மூன்று புள்ளி விவரங்கள் அடிக்கடி பயன் படுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒன்று அந் நியச் செலாவணி கையிருப்பு; இரண்டா வது பண வீக்கம் குறைந்து வருவது; மூன் றாவதாக அந்நிய மூலதன வரவு.

இந்த அளவுகோல்களை வைத்துப் பார்க்கும்பொழுது ஐக்கிய முன்னணியின் சாதனைகள், காங்கிரசின் சாதனைகளுக் குச் சற்றும் குறைந்ததல்ல; கிட்டத்தட்ட 66,500 கோடி ரூபாய் அந்நியச் செலா வணி கையிருப்பில் உள்ளது. இறக்குமதி வர்த்தகத்துக்கு இக்கையிருப்புச் சாதகமா னது. ஐக்கிய முன்னணி அரசு ஆண்டொன் றிற்கு 35,000 கோடி ரூபாய் அந்நிய மூலத னத்தைக் கவர்ந்து வர சபதமிட்டிருந்தது. கடந்த ஆறு மாதங்களில் 22,750 கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய மூலதனம் நாட் டினுள் நுழைந்துள்ளது. பண வீக்கமும் கட் டுக்குள் இருப்பதாகத்தான் அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனாலும் தொழிற்று றையில் தேக்கம் உருவாகி வருவதாக நாடெங்கும் குரல்கள் ஒலிக்கத் துவங் கியுள்ளன.

"21 அங்குலம் கொண்ட தொலைக்காட்சிப் பெட்டி வாங்குப வர்களுக்கு 14 அங்குல தொலைக் காட்சிப் பெட்டி இலவசம்" என அறி வித்துள்ளது அகாய் நிறுவனம். "பழையதிற்குப் பதிலாக புதியது", "சிறப்புத் தள்ளுபடி", "கூடுதல் பரிசுப் பொருட்கள்" - என வரும் விளம்பரங்களில் இருந்தே ஆடம்பர நுகர்பொருள் சந்தையில் நிலவும் தேக்கத்தைப் புரிந்து கொள்ள லாம். இரும்பு, சிமெண்ட், அலுமினி யம், உரம், துணி, மின்சாரம் போன்ற 24 முக்கிய தொழில்கள் 95-ஆம் ஆண்டில் (ஏப்ரல் தொடங்கி ஆகஸ்டு முடிய) 12.1 சதவீத வளர்ச்சியை எட் டியிருந்தன. 1996-ஆம் ஆண்டில் இத்தொழில்களின் வளர்ச்சி 4.8 சதவீ தமாகச் சுருங்கிவிட்டது. போதுமான அந்நியச் செலாவணி கையிருப்பு இருந்தும் ஆலைகளுக்குத் தேவைப் படும் இயந்திரங்கள், மூலப் பொருட் கள், உதிரி பாகங்கள் இறக்குமதியும் சரிந்து விட்டது.

இத்தேக்கத்தையடுத்து குஜராத் மாநிலத்தில் தேசிய பஞ்சாலைக் கழகத்தைச் சேர்ந்த பல துணி ஆலைகள் மூடப்பட்டன; தமிழ்நாட்டில் கோயம்புத் தூரை மையமாகக் கொண்டு இயங்கும் நெசவு இயந்திரத் தொழிலில் 30 சதவீத தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் கழுத் துக்கு கத்தியாகத் தொங்கும் இத்தேக்கத் தால், தனியார் மற்றும் பொதுத் துறையைச் சேர்ந்த 361 பெரிய நிறுவனங்களுள், 267 நிறுவனங்கள் பாதிப்படைந்துள்ளன.

1990-களின் ஆரம்பத்தில் இந்தியத் தொழிற்துறையில் நிலவிய தேக்கத்தை உடைப்பதற்குத்தான் தாராளமயமாக்கல் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்பொழுது, ஐ.எம்.எஃப். இந்தியாவிடம், "ஆண்டு வரவு-செலவு கணக்கில் விழும் துண்டுத் தொகையைக் குறைக்க வேண்டும்" என நிபந்தனை விதித்தது. இதற்காக, "புதிய தொழில்களில் அரசு முதலீடு செய்யக்கூ டாது; நட்டத்தில் செயல்படும் பொதுத் துறை நிறுவனங்களை மூடிவிட வேண் டும்; மானிய உதவிகளைக் குறைக்க வேண்டும்" எனக் கட்டளையிட்டது. தடு மாற்றங்கள் இருப்பினும், ஆட்சியாளர்கள் ஐ.எம்.எஃப். காட்டிய வழியில்தான் செயல்பட்டு வருகின்றனர்.

ஆனால், அரசு கைகழுவிய தொழில் துறைகளில் அந்நிய-தனியார் மூலதனம் வெள்ளமெனப் பாயும் என்ற கனவுதான் பொய்த்துப் போனது. ஏற்கனவே இலாபத் தில் இயங்கும் தொழிலைக் கைப்பற்றுவது, ஆடம்பர நுகர்பொருள், பங்குச் சந்தை முதலீடு, தொலைபேசி - இப்படி இலாப உத்தரவாதமிக்க துறைகளில்தான் அந்நிய மூலதனம் பாய்ந்தது. அதேபொழுதில் தொழிற்துறை இறக்குமதியை ஊக்குவிக்க சுங்க வரி குறைக்கப்பட்டதால், இரும்பு, நெசவு இயந்திரங்கள் போன்ற 'தேசிய'த் தொழில்கள் அந்நியப் போட்டியைச் சமா ளிக்க இயலாது நசிவடைந்தன. இவற் றோடு கடந்த ஐந்தாண்டுகளாக நாட்டின் சேமிப்பு குறைந்து, 'தேசிய' மூலதன உரு வாக்கம் படிப்படியாக நசிந்து வருவதும் நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு நெருக்க டியைத் தோற்றுவித்துள்ளன. ஐ.எம்.எ ஃப். வகுத்துக் கொடுத்த பொருளாதாரத் திட்டத்தின் உள்முரண்பாடுகளில் வசமா கச் சிக்குண்டு போயுள்ளது இந்தியப் பொருளாதாரம்.

"சீர்திருத்தங்களை ஐக்கிய முன்னணி முறையாக நடைமுறைப்படுத்தவில்லை; அதுதான் தேக்க நிலைக்குக் காரணம்" எனக் குற்றஞ் சுமத்துகிறது, காங்கிரசு. ஐ.டி.சி., ஷா வாலஸ் நிறுவனங்களின் மீது நடந்த சோதனைகளைக் காரணம் காட்டி

**தரகு முதலாளிகளின் மாநாட்டில் சிதம்பரம் - மாறனுடன் பிரதமர் தேவேகவுடா - எளிய விவசாயி முதலாளிகளின் காவலன் ஆனார்**





படிப்பகம்

www.padippakam.com

''மீண்டும் பழைய 'சோதனை ராஜ்ஜியம்' (Raid Raj) வந்துவிட்டது; அதுதான் தேக்கத்திற்கு காரணம் என்கிறார்கள், தரகு முதலாளிகள். அதாவது ''கட்டுப்பாடுகளற்ற தாராளமயமாக்கம் வேண்டும்'' என்பது தான் அவர்களின் கோரிக்கை!

ஐக்கிய முன்னணி அரசோ இவ்விசயத்தில் எள் என்பதற்கு முன் எண்ணெயாக நிற்கிறது. இத்தேக்க நிலையை உடைப்பதற்கு ஐ.மு. தரகு முதலாளிகளுக்கும், அந்நிய முதலீட்டாளர்களுக்கும் வாரி வழங்கியிருக்கும் சலுகைகள் எண்ணிலடங்கா:

- தரகு முதலாளிகளுக்கு கடன் கொடுப்பதற்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் கையிருப்பைக் குறைத்து, 10,000 கோடி ரூபாயை மூலதனச் சந்தையில் கொட்டியது.
- அதிக இலாபமீட்டும் நிறுவனங்கள், வரிச் சலுகைகளைப் பயன்படுத்தி வரி ஏய்ப்பு செய்வதைத் தடுக்க ''குறைந்தபட்ச மாற்று வரி விதிப்பு முறை'' கொண்டு வரப்பட்டது. தரகு முதலாளிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இவ்வரி விதிப்பை ரத்து செய்துவிடுவதாக உறுதிகூறியுள்ளார் தேவே கவுடா.
- உள்நாட்டு மற்றும் அந்நிய பரஸ்பர நிதி நிறுவனங்கள் ஓட்டுரிமையுடன் கூடிய பங்குகளில் இனி முதலீடு செய்யலாம்.
- அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் 100 சதவீதம் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யலாம்.
- புதிதாகத் தொடங்கப்படும் நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்பவர்களுக்கு வரிச் சலுகைகள்.
- 5 கிலோ தங்கத்தை நாட்டினுள் எடுத்துவர அனுமதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு இந்தியர்கள், இனி 10 கிலோ தங்கத்தை எடுத்து வரலாம்.
- வங்கிகள் தரகு முதலாளிகளுக்கு வழங்கும் கடனின் வட்டி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

இவையோடு, மின்னணு மென்பொருள், மரபுசாரா எரிசக்தி உள்ளிட்ட ஒன்பது தொழில் துறைகளில் 74 சதவீத நேரடி அந்நிய முதலீட்டிற்கும், நெடுஞ்சாலைப் பாலங்கள், சாலைகள், சுரங்கப் பாதைகள் உள்ளிட்ட 16 விதமான துறைகளில் 51 சதவீத நேரடி அந்நிய முதலீட்டிற்கும் இனி மைய அரசின் அனுமதி தேவையில்லை. அந்நிய முதலீடு ஊக்குவிப்பு கமிட்டியின் ஒப்புதலே போதுமானது.

மேலும், அந்நிய நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு தொலைபேசி சேவையில் அடியெடுத்து வைத்துள்ள உள்நாட்டு நிறுவனங்கள், சார்பு நிதி நிறுவனங்களைத் தொடங்கி, பங்குகளை வெளியிட்டு மூலதனத்தைத் திரட்டிக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன. இவ்விற்பனையில் 49 சதவீத பங்குகளை அந்நியச் சந்தைக்குக் கொண்ட செல்லவும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இச்சலுகை அந்நிய மூலதனம் தொலைபேசித் துறையில் தன் பிடியை மேலும் வலுப்படுத்திக் கொள்ளவே வகை செய்யும்.

இச்சலுகைகளும் போதாதென்று, தரகு முதலாளிகளும், ஏகாதிபத்தியங்களும், ''ஏற்றுமதி ஈட்டும் அமெரிக்க டாலர் முழுவதையும் சந்தை மதிப்புக்கு இந்திய ரூபாயாக மாற்றிக் கொள்ளவும், காப்புறுதி உள்ளிட்ட சேவைத் துறைகளை தனியாருக்கும் - பன்னாட்டு நிறுவனங்களுக்கும் திறந்து விடவும்'' கோரி ஐ.மு. அரசை நிர்ப்பந்தித்து வருகின்றனர்.



நியாய விலைக் கடை முடங்கிப் போனதைக் கண்டித்து சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டம்: தாராளமயமாக்கலின் எதிர்விளைவு

பன்னாட்டு நிறுவனங்கள் ஒருபுறம் அரசு அள்ளித் தரும் இச்சலுகைகளை அனுபவித்துக் கொண்டே, மறுபுறம் தங்கள் பணபலத்தைக் கொண்டு, இந்திய முதலாளிகளுடன் சேர்ந்து தொடங்கிய கூட்டு நிறுவனங்களை முழுமையாகக் கைப்பற்றத் தொடங்கியுள்ளன. இந்த அந்நியக் கூட்டு நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்களின் முழுமையான துணை நிறுவனங்களாக உருமாறி வருகின்றன.

- ''தேவூ'' என்ற தென் கொரிய பன்னாட்டு நிறுவனமும், டி.சி.எம்.-மும் இணைந்து 'டி.சி.எம்.-தேவூ'' என்ற பெயரில் கார் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவின. இன்று இத்தொழிலில் 96 சதவீதப் பங்குகளைக் கைப்பற்றியுள்ள தேவூ, டி.சி.எம். என்ற பெயரை நீக்கிவிடப் போவதாக அறிவித்துள்ளது.
- சென்னைக்கு அருகே கும்மிடிப்பூண்டியில் அமையவுள்ள நைலான் 6,6 டயர் தொழிற்சாலையின் (தாபர் — டியூ-பாண்ட்) 95 சதவீத பங்குகள் அமெரிக்க பன்னாட்டு நிறுவனமான டியூ-பாண்டுக்குச் சொந்தமாகி விட்டது.
- ஸ்ரீராம் நிறுவனமும், ஜப்பானின் ஹோண்டாவும் இணைந்து தொடங்கிய கார் தொழிற்சாலையில், 60 சதவீதப் பங்குகளைப் பெற்றிருந்த ஹோண்டா, இன்று 90 சதவீதப் பங்குகளைப் பெற்று, ஸ்ரீராமை ஓரங்கட்டிவிட்டது.

இப்படி இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இந்தக் கைப்பற்றுதலுக்கு எதிராக இந்திய 'தேசிய' முதலாளிகளிடமிருந்து எந்தவொரு சிறு முணுமுணுப்பும் எழவில்லை. ''போட்டி வாழ்க'' என ஆரவாரமாக் கூப்பாடு போட்டவர்கள் பன்னாட்டு நிறுவனங்களின் முன் மண்டியிட்டுக் கிடக்கின்றனர்.

''அந்நிய மற்றும் தனியார் மூலதனத்துக்கு நிலவி வந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டவுடன் தொழில் வளர்ச்சி சிறது உயருவதும், சில ஆண்டுகளிலேயே வளர்ச்சி விகிதம் சரிவதும் தாராளமயம் அறிமுகப்படுத்தப்பட்ட எல்லா நாடுகளிலும் காணக்கூடியதுதான்'' என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள். இதற்கு உதாரணமாக அவர்கள் பிரேசிலைச் சுட்டிக் காட்டுகின்றனர். கடன் வில்லைகளின் மூலமே நுகர்வுக் கலாச்சாரத்தை அனுபவித்து வரும் நடுத்தர வர்க்கம், ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் கடன் சுமையால் தடுமாறி நிற்கும் பொழுது இத்தேக்கம் ஆட்சியாளர்களைப் பயமுறுத்தத் தொடங்கி விடுகிறது.

''இத்தேக்கத்தை உடைக்க தாராளமயமாக்கலைத் தீவிரப்படுத்திக் கொண்டே, அடிமட்ட மக்களின் நலனைப் பாதுகாக்கவும் திட்டங்கள் வேண்டும்'' எனப் புலம்புகின்றன ஓட்டுக் கட்சிகள். பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்த வேண்டும் என்ற நிதியமைச்சர் சிதம்பரத்தின் யோசனையை, காங்கிரசு, பா.ஜ.க. மட்டுமின்றி ஐ.மு.-வின் கூட்டணிக் கட்சிகளும் எதிர்க்கின்றன. இதன்மூலம் விலைவாசி உயர்வில் இருந்து மக்களைக் காப்பாற்றி விட்டதாக நாடகமாடலாம். பெட்ரோலியப் பொருட்களின் விலையை ஏற்றாவிட்டாலும்கூட, பெட்ரோலிய இறக்குமதி நிதிக் கணக்கில் ஏற்பட்டுள்ள பற்றாக் குறையால் பணவீக்கம் அதிகரித்து, விலைவாசி உயரும் அபாயமுள்ளது.

நேரு பாணி சோசலிச பொருளாதாரத்தால் ஏற்பட்ட தேக்கத்தை உடைக்க தாராளமயமாக்கலையும், தாராளமயமாக்கலால் நேரும் அபாயங்களைத் தவிர்க்க நேரு பாணி சோசலிச சலுகைகளையும் ஒன்றுக்கொன்று எதிர் எதிராக நிறுத்தி நெருக்கடிகளில் இருந்து தப்பித்து விடலாம் என ஆளும் வர்க்கக் கட்சிகள் மனப்பால் குடிக்கின்றன. இடது - வலது போலி கம்யூனிஸ்டுகளும்கூட இந்த மையப் பாதையைத் தான் ஆதரித்து நிற்கின்றன. ஓட்டுக் கட்சிகளின் இந்த இரட்டைக் குதிரை சவாரி இந்தியப் பொருளாதாரத்தின் நெருக்கடிகளை — விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை, தொழில் மந்தம், சிறு - நடுத்தர தொழில் நசிவு, அந்நியக் கடன் அதிகரிப்பு — தீர்க்கப் பயன்படாது; மாறாக, அது புண்ணுக்குப் புணுகு தடவுவது ஆகும்.

• ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

## மகளிருக்கு இட ஒதுக்கீடு

# ஆணாதிக்க அரசியல்வாதிகளின் முட்டுக்கட்டை

சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல்களில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு செய்வதற்குப் புதிய சட்டதிருத்தம் கொண்டு வந்தனர். இருக்கின்ற ஒரு சில பெண் எம்.பி.க்களும் கட்சி வேறுபாடின்றி இதைச் சட்டமாக்கக் குரல் கொடுத்தனர். ஆனாலும் இது சட்டமாக்கப்படும் வழியைக் காணோம். பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் தலித் பெண்கள், பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டது. இதில் ஒருமித்த கருத்து இல்லை. இதனாலும் ஆண் எம்.பி.க்களிடையே போதிய ஆதரவில்லாததாலும் இச்சட்டதிருத்தம் கிடப்பில் போடப்பட்டது. இப்போதைக்கு சட்டமாக்கமாட்டார்கள் என்பது நிச்சயம்.

ஆந்திராவில் காங்கிரசு தோற்று, தெலுங்கு தேசம் கட்சி ஆட்சிக்கு வருவதற்கு மாநில அளவில் நடந்த சாராயத்திற்கு எதிரான பெண்களின் போராட்டம் ஒரு முக்கிய காரணம். காடுகளை அழித்து அணைகள் கட்டி தமது வாழ்வைப் பறிப்பதற்கெதிராக ஆதிவாசிப் பெண்களின் வீரமிக்க போராட்டங்கள். நர்மதா அணை கட்டுமான வேலைகளைப் பார்க்க வந்த உலக வங்கி அதிகாரிகளை பெண்கள் கெரோ செய்தனர். சமீபத்திய உலக அழகிப் போட்டிக்கெதிரான பெண்களின் போராட்டம், ராசஸ்தானில், மகாராட்டிரத்தில் என நாடுமுழுவதும் பெண்களின் போராட்டங்கள்.



உலக அழகிப் போட்டியை அமிதாப்புடன் இணைந்து நடத்திய கோத்ரெஜ் நிறுவனத்தின் பெங்களூர் அலுவலகத்தை அடித்து நொறுக்கிய பெண்கள்

இப்போராட்டங்களில் பெரும்பாலானவை உள்ளூர் அளவிலும் தன்னெழுச்சியாகவுமே நடக்கின்றன. இவற்றை ஓட்டுக் கட்சிகள் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளவும், பெண்களை இந்த அரசமைப்பின் அங்கமாக்கிக் கொள்ளவுமே அவசர அவசரமாக சட்ட திருத்தம் கொண்டு வருகின்றனர். இதைக் கூட ஏற்றுக் கொள்ளாத ஆணாதிக்க வெறியர்கள் எதிர்க்கின்றனர்.

இன்றைக்கு பொது வாழ்விற்கு பெண்கள் வருவது அரிது. அதிலும் அரசியலுக்கு வருவதென்பது மிக அரிது. இந்த ஆணாதிக்க சமூக அமைப்பில் பொது வாழ்விற்கு வந்தாலே கேவலமாகப் பேசுவர். அரசியலுக்கு வந்தால் கேட்கவே வேண்டாம்.

இது இன்றைக்கு மட்டுமல்ல. சுதந்திரப் போராட்ட காலத்திலிருந்தே அரசியலுக்கு வருகின்ற பெண்களை மதிக்காததும் இழிவாகக் கருதுவதும் உள்ளது. அன்றைக்கு முத்துலட்சுமி ரெட்டி, அனந்த நாயகி போன்றவர்களிலிருந்து இன்றைய இந்திரா காந்தி வரை பெண் என்பதாலே இழிவுபடுத்தப்படுவது சாதாரணமாயுள்ளது. இவர்களெல்லாம் விதிவிலக்குதான். பெண்கள் என்பதாலேயே இவர்களின் நடவடிக்கைகளை முற்றாக நியாயப்படுத்தப் போவதில்லை. இந்திரா காந்தி, ஜெயலலிதா போன்றவர்களின் பாசிச நடவடிக்கைகளையும், லஞ்ச, ஊழல், கிரிமினல் அரசியலையும் யாருமே ஏற்க முடியாது.

1989-91 திமுக ஆட்சியில் எதிர்க்கட்சி தலைவியாயிருந்த 'ஜெ' பேச எழுந்த போதெல்லாம் தி.மு.க. உறுப்பினர்கள் ஆபாசமாக சைகைகாட்டி கேவலப் படுத்தினர். பாசிச ஜெயாவோ கிரிமினல் நடவடிக்கை மூலம் தி.மு.க. ஆட்சியைக் கவிழ்த்து, அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தையே மொட்டையடித்து விட்டார் என்பது வேறு விஷயம்.

அது எப்படிப் போனாலும், அரசியலுக்கு பெண்கள் வந்தால் இழிவாகப் பார்ப்பதுதான் தொடர்கிறது. தற்போது ஏற்கனவே அரசியலில் உள்ள ஆண்களின் உறவினராக உள்ள பெண்கள்தான் தேர்தலில் நிற்கின்றனர். அது இந்திராவாயினும், 'ஜெ'வாயினும் இதுதான் நிலைமை. அந்த 'மேட்டுக்குடி' பெண்களையே இழிவுபடுத்தும்போது சாதாரண பெண்கள் வந்தால் விடுவார்களா? எவ்வளவு கேவலப்படுத்த மாட்டார்கள்?

இந்தப் போக்கிற்கு மாறானது என்ற வகையில் தற்போது கொண்டுவரப்படவுள்ள சட்ட திருத்தம் வரவேற்கத் தக்கதே. தேர்தலில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு செய்யும் போது கட்டாயம் பெண்களை தேர்தலில் நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் வரும். அப்போது உறவினர்களை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தவிர பெருமளவில் பெண்கள் அரசியலுக்கு வர தூண்டுதலாயிருக்கும். இந்த ஓட்டுப் பொறுக்கி அரசியலுக்கு மட்டுமல்ல, புரட்சிகர அரசியலுக்கும்தான்!

தற்போது ஓட்டுக் கட்சிகளின் எந்த ஒரு பொதுக் கூட்டத்திலும் பெண்கள் பெரும்பாலும் இருக்கமாட்டார்கள். மே தின ஊர்வலங்களில் கூட பெண் தொழிலாளர்கள் மிக மிகக் குறைந்த அளவில் தான் கலந்து கொள்கின்றனர்.

இன்றைய தேர்தல் அரசியல் கிரிமினல்மயமாகி வருகிறது. காசு பணம் உள்ளவனும், அடியாள் பலம் உள்ளவனும் தேர்தலில் நிற்பது என்ற நிலையிலிருந்து காசு பணம் உள்ள ரௌடிகளே தேர்தலில் நிற்பது என மாறி வருகிறது. இப்படி கிரிமினல்மயமாகி வரும் சீரழிவை பெண்கள் பெருமளவில் வந்தால் சீராக்கி விடலாம் எனக் கருதினால் அது பகற்கனவு.

கடந்த ஆட்சியில் பெண் எம்.எல்.ஏ.க்களின் நடவடிக்கைகள் இதற்கு நம்பிக்கையூட்டுவதாக இல்லை. அவர்களும் இந்த ஊழல் - அராஜக - கிரிமினல் - பொறுக்கி அரசியலில் முன்னின்றனர்.

சிதம்பரம் பத்மினி, வாச்சாத்தி ஆதிவாசிப் பெண்கள், செஞ்சி இருளர் பெண் விஜயா, முத்தாண்டிக் குப்பம் வசந்தா, தனி கல்பனா சுமதி, இன்னும் ரங்கம்மாள் என எத்தனையெத்தனை காவல் நிலைய கற்பழிப்புகள், கொலைகள். எந்தப் பெண் எம்.எல்.ஏ. இதற்காக குரல் எழுப்பினார்?

அகில இந்திய அளவில் பல பெண்களின் பிரச்சினைகள் எழுந்த போது பல பெண் எம்.பி.க்கள் பெண்களின் உரிமைக்காக குரல் எழுப்பவேயில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மேட்டுக்குடி பெண்கள்தான் இன்று பெருமளவில் அரசியலில் உள்ளனர். இட ஒதுக்கீட்டின் மூலம் நடுத்தர, கீழ்த்தட்டு வர்க்கப் பெண்கள் வரும் போது நிலைமை மாறலாம். இப்படியே இந்நிலை மாற்றமின்றி தொடர வாய்ப்பில்லை.

இந்த இட ஒதுக்கீடும் கூட அதிகாரம் ஏதுமற்ற சட்டமன்ற, பாராளுமன்ற அமைப்புக்குத்தான். இதில் வெற்று அரட்டையடிக்கலாம். ஆக்கப்பூர்வமான ஏதாவது செய்வதெனில் அதிகாரம் வேண்டுமே. அதற்கு என்ன செய்வது?

ஓட்டு மொத்தமான இந்த சமூக அமைப்பு அடித்து நொறுக்கித் தூக்கியெறியப்படாத வரை, இந்த ஒதுக்கீட்டின் மூலம் பெண்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

ஏற்கனவே பெண்களை கடைச்சரக்காக்கி சினிமா, விளம்பரங்களில் கேவலமாக்கி வருகின்றனர். வியாபாரமாகி வரும் அரசியலில் பெண்களை வைத்து இலாபமீட்ட சிலர் முயலலாம். பலரின் கதை நைனா சஹானி போல முடியாமலிருக்க குரல் கொடுக்கவாவது பெண்கள் முன் வருவார்களா எனப் பார்க்கலாம்!

> பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை சீர்திருத்தம் என்ற அளவில் நாம் வரவேற்கிறோம்; அதே பொழுதில் இச்சீர்திருத்தம் ஓட்டுக் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு எழுந்து வரும் பெண்களின் போராட்டங்களை நிறுவனமயமாக்கவும், ஓட்டு வேட்டையாடப் பயன்படுத்திக் கொள்ளும் நரித் தந்திரத்தோடுதான் கொண்டு வரப்படுகிறது.

இறுதியாக தாழ்த்தப்பட்ட பிரிவு மக்களுக்கு அனைத்து மட்டங்களிலும் இட ஒதுக்கீடு எப்படி அவசியமோ அது போலவே சமூகத்தில் பாதியளவிலிருந்தும் இன்னும் அடிமைத்தனத்திலேயே உழலும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு அவசியம்தான். ஒரு சீர்திருத்தம் என்ற அளவிலே இதை நாம் வரவேற்கிறோம். அதே நேரம் பிற்படுத்தப்பட்ட சாதிகளில் சில ஆதிக்க சாதிகளாக இருப்பதால்தான், பிற்படுத்தப்பட்டவர்கள் யார் என தெளிவாக வரையறுக்காமல் பொதுவாக பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு என்பது, உண்மையிலேயே அரசியல் - சமூக - பொருளாதார ரீதியில் பிற்படுத்தப்பட்டோருக்கு பயனின்றி அதிலுள்ள ஆதிக்க சாதிகள் மேலும் பலம் பெறவே உதவும். இதைப் போல பெண்கள் இடஒதுக்கீட்டைப் பார்க்க முடியாது.

அதிகாரம் ஏதுமற்ற தேர்தலில் இட ஒதுக்கீடு என்றாலும் எதிர்மறையில் இதை நாம் வரவேற்கிறோம்.

• பாரி

# விவசாயிகள் ஆலைக் கரும்பல்லர்

## கூட்டுறவு - தனியார் சர்க்கரை ஆலைகளின் மோசடிகள் தி.மு.க. ஆட்சியிலும் தொடர்கின்றன

தமிழ்நாட்டில் 32 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றுள் 18 ஆலைகள் கூட்டுறவு நிறுவனங்கள்; எஞ்சிய 14 ஆலைகளுள் 3 தமிழக அரசுக்கும், 11 தனியாருக்கும் சொந்தமானவை. இந்த ஆலைகள் அனைத்தும் கரும்பு பயிரிடும் ஐந்து லட்சம் தமிழக விவசாயிகளின் வாழ்வில் மண்ணை வாரிப் போடுவதில், ஒன்றையொன்று விஞ்சி நிற்கின்றன. வெட்டி எடுத்துச் சென்ற கரும்பிற்குண்டான பணத்தைப் பாக்கியில்லாமல் தரக்கோரி, கரும்பு விவசாயிகள் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தமிழகமெங்கும் போராடி வருகிறார்கள். முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில்தான் கரும்பு விவசாயிகளின் வாழ்க்கையில் 'சனி' பிடித்தது; அதன்பின் அரியணை ஏறியுள்ள தி.மு.க.வும் கூட, கரும்பு விவசாயிகளின் போராட்டத்தினைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

பெரியார் மாவட்டத்தில் இயங்கும் சக்தி சர்க்கரை ஆலைக்காக 10,000 விவசாயக் குடும்பங்கள் 30,000 ஏக்கர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்து தருகின்றன. இவ்வாலை சென்ற ஆண்டு (1995-96) விவசாயிகளிடமிருந்து கரும்பினை டன் ஒன்றுக்கு ரூ.645/-க்கு கொள்முதல் செய்தது. ஆனால், பணம் பட்டுவாடா செய்யும் பொழுது டன் ஒன்றுக்கு ரூ.610/- எனக் கணக்கிட்டுக் கொடுத்துவிட்டு, மீதிப் பணத்தைச் சுருட்டிக் கொண்டுவிட்டது. இவ்வாண்டோ (1996-97) டன் ஒன்றுக்கு ரூ.538/-ஐ கொடுத்துவிட்டு, மீதிப் பணத்தை விவசாயிகளின் பெயரில் "சக்தி பைனான்ஸில்" சேமிப்புக் கணக்கில் போட்டுவிட்டதாகப் போக்குகாட்டி வருகிறது.

தென்னாற்காடு மாவட்டம் பெண்ணாடத்தில் இயங்கி வரும் அருணா சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகளுக்குத் தர வேண்டிய பாக்கி தொகை 14 கோடி ரூபாய். இத்தொகையை உடனடியாகத் தரக் கோரி அம்மாவட்டத்தைச் சேர்ந்த 20,000 கரும்பு விவசாயிகள் கடந்த ஆண்டு நவம்பர் 15-ந் தேதி சாலை மறியலில் ஈடுபட்டனர்; டிசம்பர் 5-ந் தேதி மீண்டும் சாலை மறியல்; இதன் பின் மூன்று நாட்கள் கழிந்து ஆலையின் முன் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்.டி.ஓ. தலைமையில் 20 முறையும், மாவட்ட ஆட்சியர் மொகந்தி தலைமையில் இரண்டு முறையும் பேச்சுவார்த்தைகள் நடந்த பின்பும் கண்ட பலன் பூஜ்யம்தான். இனியும் ஏமாந்து விடக்கூடாது எனப் பொங்கியெழுந்த விவசாயிகள், அருணா சர்க்கரை ஆலையின் கரும்பு கொள்முதல் அலுவலகங்களை ஜனவரி 2-ந் தேதி பூட்டுபோட்டு இழுத்து மூடினர்.

அருணா சர்க்கரை ஆலை நட்டத்தில் இயங்குவதாகப் பொய்க் கணக்கு எழுதி ஏய்த்து வருகிறது நிர்வாகம். ஆனால் சர்க்கரை ஆலையில் கிடைக்கும் இலாபத்தைக் கள்ளத்தனமாகக் கடத்திச் சென்று, சாராய ஆலைகளையும், ஐந்து நட்சத்திர விடுதிகளையும் நிர்வாகம் அமைத்து வருவதுதான் இந்த நட்டக் கணக்கின் பின்னுள்ள உண்மை.

சர்க்கரை ஆலைகள் நட்டத்தில் இயங்குவதற்கு வாய்ப்பேயில்லை என்கின்றனர் கரும்பு விவசாயிகள். ஆலையில் உற்பத்தியாகும் சர்க்கரை தவிர, "மொலாசஸ்" எனப்படும் ஆலைக் கழிவையும், கரும்புச் சக்கையையும் விற்று இலாபம் ஈட்ட முடியும். ஆனால் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளோ அரசு அதிகாரிகளின் ஊழல், திறமையின்மை காரணமாக நட்டத்தில் இயங்கிக் கொண்டுள்ளன.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் ஊழல் வரலாறு, ஜெயா படம் போட்ட தினசரி நாட்காட்டி விற்பனையிலிருந்து தொடங்கியது. பத்து ரூபாய்கூட மதிப்பு பெறாத ஒரு நாட்காட்டி, ரூ.49.10-க்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு விற்கப்பட்டன. இதனால் ஆலைகள் அடைந்த நட்டம் ஒன்றரை கோடி ரூபாய்.

ஆலைகளுக்குத் தேவைப்படும் சாக்கு, விறகு, மற்றும் கரும்புச் சாற்றை சர்க்கரையாக மாற்றத் தேவைப்படும் வேதிப் பொருள்கள், இயந்திரங்களின் உதிரி பாகங்களை வாங்கிக் குவித்ததில் கையூட்டு பெற்றது; ஏற்றுமதி தரம் வாய்ந்த சர்க்கரை மூட்டைகளை சென்னை துறைமுகத்திற்கு அனுப்பியதில் முறைகேடுகள் - இப்படித் தொடர்ந்த ஊழல்களால் கூட்டுறவு ஆலைகள் அடைந்த நட்டம் கிட்டத்தட்ட 17 கோடி ரூபாய். ஆலைக் கழிவு மொலாசலை அடிமாட்டு விலைக்கு சாராய உடையாருக்கு விற்றதிலும் மிகப் பெரிய மோசடி நடந்துள்ளது.

93-ஆம் ஆண்டில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தம்மிடம் மிஞ்சியிருந்த கரும்புகளை தனியார் ஆலைகளுக்கு விற்

www.padippakam.com

றனை. இவ்விற்பனையின்பொழுது, ஆலைகளின் உயர் அதிகாரிகளுக்கு கணிசமாக இலஞ்சம் கிடைத்தது. ருசி கண்ட பூனையான அதிகாரிகள், அடுத்த ஆண்டில் விதிமுறைகளுக்குப் புறம்பாக கரும்பு விவசாயிகளை கூடுதலான பரப்பில் கரும்பு பயிரிட நிர்ப்பந்தித்தனர். சாகுபடியான கரும்புகளை வாங்கிக் குவித்து, கோடி கோடியாய் இலஞ்சம் பெற நினைத்த அதிகாரிகளின் ஆசைக் கனவில் மண் விழுந்தது. தனியார் ஆலைகள் கூட்டுறவு ஆலைகளில் இருந்து கரும்பு வாங்கிவில்லை. இது, குவிந்து கிடந்த கரும்பினை ஆண்டு முழுவதும் அரைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியது. இதனால் சர்க்கரையின் தரம் குறைந்து, சந்தையில் விலை போகாமல் தேங்கிப் போயின.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலேயே மிகுந்த இலாபத்துடன் இயங்கிய பெரிய செவலை ஆலை இன்று விவசாயிகளுக்குத் தர வேண்டிய பாக்கி பத்து கோடி ரூபாய். மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அரைவைத் திறனை அதிகரிப்பது என்ற திட்டத்தில் அதிகாரிகள் அடித்த கொள்ளையினால் அவ்வாலை இருபது கோடி ரூபாய் நட்டமடைந்துள்ளது. பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் தலைமைப் பொறியாளர் அமர்தராஜ், ஜெயா-சசி கும்பலைப் போல, தான் அடித்த கொள்ளை பணத்தைக் கொண்டு உல்லாச மாளிகை எழுப்பி வருகிறான். அச்சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களே இவ்வூழல்களை அம்பலப்படுத்திப் போராடி வருகின்றனர்.

கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளிடமிருந்து திரட்டிய பணத்தைக் கொண்டுதான் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிர்மாணிக்கப்பட்டன. இவ்வாலைகள் அனைத்திலும் கரும்பு விவசாயிகள் சட்டபூர்வ பங்குதாரர்களாக இருந்தாலும், ஆலையின் அன்றாட நிர்வாக நடவடிக்கைகள் - முடிவுகளில் இவ்விவசாயிகள் எவ்விதத்திலும் தலையிட முடியாது. சங்கத் தேர்தல் மூலம் பதவியைக் கைப்பற்றும் ஓட்டுக் கட்சிகளும், தனி அதிகாரிகளும் தான் ஆலையின் முடிசூடா மன்னர்கள். சங்கத் தேர்தல் நடைபெறாத பொழுது அதிகார வர்க்கம்தான் தனிக்காட்டு ராஜாவாகச் செயல்படும். ஆலையின்மூலம் கிடைக்கும் இலாபத்தையும் இன்னும் சகல சுகபோகங்களையும் இக்கும்பல்கள்தான் கூட்டுச் சேர்ந்தோ, தனியாகவோ பல ஆண்டுகளாக அனுபவித்து வருகின்றன.

"கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம்" எனக் கூறி ஓட்டுப் பொறுக்கிய தி.மு.க. கூட்டணி, இன்று தனியார் ஆலை முதலாளிகளுக்குச் சாமரம் வீசி வருகிறது. கூட்டுறவு ஆலைகளில் நடந்துள்ள ஊழல்களை அம்பலப்படுத்தி, அரசியல் ஆதாயம் தேட தி.மு.க. காட்டும் தீவிரம், விவசாயிகளின் பாக்கியைத் திருப்பித் தருவதில் காணவில்லை. அரசாங்கமும், தனியார் முதலாளிகளும் கொடுக்கல் வாங்கலில் இருக்க வேண்டிய தொழில் நேர்மையை அப்பட்டமாகவே காற்றில் பறக்கவிட்டுள்ளன.



சாது மிரண்டால் காடு கொள்ளாது: கரும்பு விவசாயிகளால் அடித்து நொறுக்கப்பட்ட போளூர் தரணி சர்க்கரை ஆலை அலுவலகம்

இந்நயவஞ்சகத்தை பொறுமையுடன் சகித்துக் கொள்ள விவசாயிகள் இனியும் தயாராக இல்லை. போளூர் தரணி சர்க்கரை ஆலையின் அலுவலகத்தை அடித்து நொறுக்கிய விவசாயிகளின் கோபக் கனலில் இருந்து, போளூர் மற்றும் கலசபாக்கம் எம்.எல்.ஏ.க்களின் வாகனமும் தப்பிவிடவில்லை.

விவசாயிகளின் போர்க்குணம் கொண்ட இப்போராட்டத்திற்கு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் தங்கள் ஆதரவைத் தெரிவிக்க வேண்டும். இந்த ஒற்றுமைதான் போராட்டத்தில் புதிய அத்தியாயத்தைத் துவக்கி வைக்கும்; கூட்டுறவு ஆலைகள் ஊழலால் நசிவடைவதையும், கரும்பு விவசாயிகள் மோசடி செய்யப்படுவதையும் தடுத்து நிறுத்தும்.

• செல்வம்

## இந்து மதவெறியர்களின் அடாவடித்தனம்! ஓட்டுக் கட்சிகளின் பாராமுகம்!

கோவை மக்கள் கலை இலக்கியக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் ஆனந்தன், ராதா, பாலு, சேகர் நால்வரும் கடந்த 12.01.97 அன்று துடியலூர் அருகேயுள்ள சுப்பிரமணியம் பாளையம் - பாரதி நகரில் வீடுவீடாகச் சென்று புதிய கலாச்சாரம் மற்றும் புதிய ஜனநாயகம் இதழ்களை விற்பனை செய்தனர். இதைச் சகித்துக் கொள்ள முடியாத பா.ஜ.க. பாசிசக் கும்பல், அப்பகுதிச் செயலர் சண்முக சுந்தரம் கட்டளைப்படி, தோழர்களை வழிமறித்து இழுத்துச் சென்றது. அம்மத வெறியர்கள் நாக்கூசும் வார்த்தைகளால் தோழர்களை ஏசியதோடு, சூழ்ந்துகொண்டு தாக்கவும் செய்தனர். பு.க., பு.ஜ., இதழ்களைப் பறித்துக் கொண்டு தீ வைத்துக் கொளுத்தவும் முயன்றனர். பின்பு திடீரெனப் புத்தி வரப்பெற்று, வைத்த தீயை அணைத்து விட்டு, இதழ்களைத் திருப்பித் தராமல் எடுத்துச் சென்றனர்.

அப்பகுதியில் இயங்கும் மக்கள் நல மன்றத்தின் தலைவர் கந்தவேலுவைச் சந்தித்து, நடந்தவற்றைக் கூறிய தோழர்கள், அவரையும் அழைத்துக் கொண்டு பகுதி மக்கள் ஒத்துழைப்போடு, துடியலூர் காவல் நிலையத்தில் பா.ஜ.க. கும்பலின்மீது புகார் செய்தனர். இதற்கு முன்பே பா.ஜ.க. கும்பல் நரித்தனத்தோடு, "ம.க.இ.க.வினர் இதழ்களை வாங்க நிர்ப்பந்தித்து தங்களைத் தாக்கியதாக" புகார் செய்திருந்தனர். ஆனாலும் ஆய்வாளர் இராசேந்திரனின் கேள்விகளால், பா.ஜ.க. கும்பலின் வண்டவாளம் தண்டவாளம் ஏறியது.

இதன்பின், இந்து முன்னணியின் முன்னாள் ஒன்றியத் தலைவர் நடராஜ் சமரசம் பேச முன்வந்தார். பா.ஜ.க. கும்பல் ஆய்வாளர் முன்னிலையில் தவறை உணர்வதாக மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்கவே, தோழர்கள் புகார் மனுவைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர்.

அப்பகுதியில் இயங்கிவரும் பிற ஓட்டுக் கட்சியினர் இப்பிரச்சினையில் தலையிடாது, கைகட்டி வேடிக்கை பார்த்தன. அதே பொழுதில் தோழர்களுக்குத் துணை நின்ற கந்தவேலு மத வெறி சக்திகளுக்கு எதிராகப் போராடி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பிரச்சினை முடிந்த மறுவாரமே 19.1.97 அன்று அப்பகுதியில் "பாசிச மதவெறி சக்திகளுக்குப் பயந்து கொண்டு, பிற ஓட்டுக் கட்சிகள் ஒதுங்கிச் செல்லும் போக்கை" அம்பலப்படுத்தி நான்கு தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப் பெற்றன.

**தகவல்: ம.க.இ.க., கோவை.**


படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## ஆயுதப் பயிற்சியில் இந்து மத வெறியர்கள்

விசுவ இந்து பரிசத்தும், பஜ்ரங் தள்ளும் தங்களது அமைப்புகளைச் சேர்ந்த 200 உறுப்பினர்களைப் பொறுக்கியெடுத்து ஆயுதப் பயிற்சி அளித்துள்ளன. உ.பி. மாநிலத்தில் ஒரு வார காலம் இரகசியமாக நடந்த இந்த ஆயுதப் பயிற்சியில், கை துப்பாக்கியைப் பயன்படுத்துவது பற்றி வகுப்புகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆயுதப் பயிற்சி பெற்ற இக்குண்டர்களை நாடு முழுவதும் அனுப்பி, "சக்தி கேந்திரம்" என்ற பெயரில் கூலிப் பட்டாளத்தை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளதாக இம்மதவெறியர்கள் வெளிப்படையாக அறிவித்துள்ளனர்.

## பாலியல் குற்றங்கள் அதிகரிப்பு

1995-ம் ஆண்டு தலைநகர் தில்லி போலீசு நிலையங்களில் பதிவான பாலியல் பலாத்கார வழக்குகள் 362. அந்நகரில் பெண்களுக்கு எதிரான இப்பாலியல் வன்முறை 1996-ஆம் ஆண்டில் 470-ஆக அதிகரித்துள்ளது. பதிவாகியுள்ள வழக்குகளில், 89 சதவீத பெண்கள் தங்கள் வீட்டில் வைத்தே பாலியல் பலாத்காரப் படுத்தப்பட்டுள்ளனர்; 88 சதவீத வழக்குகளில் குற்றவாளிகள் அப்பெண்களின் நெருங்கிய உறவினர்கள் அல்லது நண்பர்கள். தங்கள் சொந்த மகளையே 'கற்பழித்த' மனித மிருகங்களும் குற்றவாளிகளுள் (எட்டு பேர்) உண்டு. நீலத் திரைப்படங்களும் ஆபாச வக்கிர கதைகளும் சர்வசாதாரணமாகப் புழக்கத்தில் இருப்பதே இந்த ஒழுக்கக் கேடு பெருகி வருவதற்கு மிக முக்கிய காரணம்.

## ஆண்டவனின் புதிய அடியார்கள்

வலது கம்யூனிஸ்ட் கட்சியின் ஆந்திர மாநிலத் தலைமை, தங்கள் கட்சி உறுப்பினர்களையும் இந்து மத ஆலயங்களில் நிர்வாகிகளாக நியமிக்க வேண்டும் என ஆந்திர முதலமைச்சரிடம் வேண்டியுள்ளது. "நாத்திகர்களை ஆலயப் பணிகளில் நியமிக்கக் கூடாது" என இந்து மதவெறியர்கள் வலதுகளின் பேராசைக்கு குறுக்கே நிற்கின்றனர். ஆனாலும் வலதுகள் சற்றும் தளர்ந்து விடாமல், "எங்கள் கட்சியிலும் ஆத்திகர்கள் இருக்கலாம்; யார் கண்டது?" எனப் பல்லைக் காட்டி வருகின்றனர்.

## வெள்ள நிவாரணத்தில் மந்திரியின் கைவரிசை

ஆந்திர மாநில மந்திரிகளுள் ஒருவர் சிவபிரசாத் ராவ். அம்மாநிலத்தில் சமீபத்தில் வீசிய புயலினால் பாதிப்படைந்த மக்களுக்கு வழங்க வேண்டிய அரிசியை, மூட்டை மூட்டையாக தனது வீட்டில் பதுக்கி வைத்துள்ளார், இவர். மந்திரியின் திருட்டுத்தனம் அம்பலமாகி, கையும் களவுமாக பிடிபட்ட பின்பும், முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு இவரைப் பதவியில் இருந்து தூக்கியெறியவில்லை. இன்னும் இத்திருடன் தான் அம்மாநிலத்தின் பஞ்சாயத்துத் துறை மந்திரி!

## தூர்தர்ஷனின் இந்து மதப் பற்று

ஆனந்த் பட்வர்த்தன் சமூக அக்கறை கொண்ட செய்தி திரைப்பட இயக்குநர். 1990-ம் ஆண்டில் இந்து மத வானரங்கள் அத்வானி தலைமையில் ஊர்வலமாகச் சென்று பாபர் மசூதியை இடிக்க முயன்றதை மையமாக வைத்து, "கடவுளின் பெயரால்" என்ற செய்தி திரைப்படத்தை இயக்கி வெளியிட்டார், இவர். பார்ப்பனர்களின் பிடியில் சிக்கிக் கொண்டிருக்கும் அரசு தொலைக்காட்சி இப்படத்தை திரையிட மறுத்துவிட்டது. இதை எதிர்த்து பட்வர்த்தன் வழக்கு தொடுத்தார். விசாரணையின் பொழுது அதிகார வர்க்கம் "இத் திரைப்படம் பாபர் மசூதி இடிக்கப்படுவதைக் காட்டுகிறது" என அண்டப் புளுகை அவிழ்த்து விட்டதோடு, "மதக் கலவரத்தைத் தூண்டிவிடுவதாகவும்" அவதூறு செய்தனர். எனினும் பம்பாய் உயர்நீதி மன்றம், "இத்திரைப்படத்தை 'தேசிய' நிகழ்ச்சிகளின் பொழுது ஒளிபரப்ப வேண்டும்" எனத் தீர்ப்பளித்துள்ளது.

## புழுங்கல் அரிசிக்கு காப்புரிமை

வேப்பமரத்திற்கும், மஞ்சளுக்கும் அடுத்து புழுங்கல் அரிசியையும் சொந்தம் கொண்டாடத் தொடங்கிவிட்டன ஏகாதிபத்தியங்கள். நெஸ்லே என்ற பன்னாட்டு நிறுவனம் புழுங்கல் அரிசியை தான் கண்டுபிடித்ததாகக் கூறி, ஐரோப்பிய நாடுகளில் காப்புரிமை பெற்றுள்ளது. புழுங்கல் அரிசிக்கும் சில உயர்வகை இந்திய உணவுகளுக்கும் இந்தியாவில் காப்புரிமை கோரி விண்ணப்பித்து உள்ளது, நெஸ்லே.

## பசுமை புரட்சி தந்த பரிசு

மேற்கு வங்க மாநிலத்தில் 3 கோடி பேர் விஷத்தன்மை கொண்ட ஆர்சனிக் எனும் இரசாயனப் பொருள் நிறைந்த குடிநீரைப் பருகி வாழும் அவலத்தினுள் தள்ளப்பட்டுள்ளனர். பணப் பயிர் விவசாயத்திற்காக நிலத்தடி நீரை ஒட்ட உறிஞ்சியதால் ஏற்பட்டுள்ள அபாயமிது. சுகாதாரமான குடிநீரை வழங்கி, இந்த அபாயத்திலிருந்து மக்களைக் காப்பாற்றிவிட முடியும். ஆனால் 'மார்க்சிஸ்டு'களின் அலட்சியப் போக்கால், தீவிரமாகப் பாதிப்படைந்த இரண்டு லட்சம் மக்கள் கை கால்கள் முடமாகி சாவை எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கின்றனர்.


## தனியார்மயமாகும் 'தூர்தர்ஷன்'!

ஒளிபரப்புத் துறையில் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களை அனுமதித்துள்ள மைய அரசு, தற்பொழுது தனது முழுக் கட்டுப்பாட்டின் கீழுள்ள "தூர்தர்ஷனிலும்" தனியார் மற்றும் அந்நிய மூலதனம் நுழைவதற்கு அனுமதி வழங்கவுள்ளது. இத்திட்டத்தின்படி "டி.டி.3" என்ற அரசின் செயற்கைக் கோள் தொலைக்காட்சியில், 49 சதவீத மூலதனமிடுவதற்குத் தனியாரும், அந்நியரும் அனுமதிக்கப்படுவர்.

**ஆர்சனிக் விஷத்தால் தொழுநோயாளியைப் போல் உருமாறும் கொடூரம்**



Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 65, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ



# இதுதான் இன்றைய இந்தியா

கல்கத்தா நகரிலுள்ள நகைக்கடையொன்றுதான் இந்தப் படம். கவிஞர்கள் வருணித்த இந்திர லோகத்து வர்ண ஜாலங்கள், எல்லாம் இந்த அதிநவீன அங்காடியின் பகட்டின் - ஆடம்பரத்தின் முன் நிச்சயம் தோற்றோடிப் போகும். பல வண்ணங்களை வாரியிறைக்கும் ஒளிவிளக்குகள்; அவ்வொளியை நாலாபுறமும் சிதறியடிக்கும் வண்ணம் கண்ணாடிகள் பதிக்கப் பெற்ற சுவர்கள்; தூண்கள். சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த பளிங்குக் கல் தரைகள்; வாடிக்கையாளரின் மேனியைத் தழுவும் நறுமணம் நிறைந்த குளிர்பதனக் காற்று; அக்காற்றில் மிதந்து வரும் மெல்லிய இசை... இப்படி இந்த பிரம்மாண்டத்தை அடுக்கிக் கொண்டே போகலாம். இங்கே வாடிக்கையாளர்கள் நகைகளை அணிந்து அழகு பார்க்க கண்ணாடி முன் நிற்கத் தேவையில்லை. அவர்களின் அழகை சினிமாவைப் போல படம் பிடித்துக் காட்ட வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாராக இருக்கும். தாராள மயமாக்கலின் துணையோடு, கருப்புப் பணத்தின் பக்க பலத்தோடு எழுந்து நிற்கும் இந்த எழில்மிகு தங்க நகை விற்பனை அரங்குகளை கல்கத்தாவில் மட்டுமல்ல, சென்னை, பெங்களூர், டெல்லி, பம்பாய் என பெரு நகரங்கள் அனைத்திலும் இப்பொழுது காண முடியும்.

இதோ சற்று வசதியாக அமரக் கூட இடமின்றி, ஒருவரொடு ஒருவர் உரசிக் கொண்டு வேலை செய்யும் இத்தொழிலாளர்கள், கல்கத்தாவின் தங்க நகை கைவினைஞர்கள். பட்டியில் அடைக்கப்படும் பன்றிகள், இக்கைவினைஞர்களை விட வசதியாகப் பொழுதைக் கழிக்கும். நகைக்கடை அதிபர்கள் தங்கள் பணத்தைக் கொண்டு இவர்களின் திறமையை மட்டும் விலைக்கு வாங்கவில்லை; உயிரையும் பறிக்கும் எமனாக உலா வருகிறார்கள் என்பதும் உண்மை. அனலில் வெந்து, அமிலப் புகையை சுவாசித்து இத்தொழிலாளர்களுள் பலர் எலும்புருக்கி நோயாலும், மார்ச்சளியாலும் மாண்டு போகிறார்கள். நகைக் கடைகளின் பளபளப்பிலும், நகைகளின் நேர்த்தியிலும் மயங்கிப் போகும் மேட்டுக்குடி - நடுத்தர வர்க்க வாடிக்கையாளர்களே, உங்களது ஆனந்தம் இந்த அவலத்தில்தான் பிறக்கிறது.

இக்கும்பலின் பகட்டு வாழ்வுக்கு நம் வாழ்வை இனியுமா பணயம் வைப்பது?

